
2005)
யிர் ஓசை



# உயிர் ஓசை

ராஜேஷ் குமார்

## 1

"அம்மா!"

பால் 'குக்கர்' விசிலடிப்பதற்காக 'ஸ்டவ்' அருகே காத்திருந்த சொர்ணம், சமையலறை வாசலில் எழுந்த குரலைக் கேட்டுத் திரும்பினாள்.

மகன் ரவி நின்றிருந்தான். கையில் நீளமாய் ஒரு உறை. முகம் முழுக்க மகிழ்ச்சி, பவுடர் பூசியது மாதிரித் தெரிந்தது.

"என்ன ரவி... நூலகத்துக்குப் போயிட்டு வர்றேன்னு கிளம்பினே! கையில ஏதோ உறையோடு வந்து நிக்கிறே? என்ன அது?"

"அம்மா...! இப்ப எதுவும் கேக்காதே! மொதல்ல கிழக்கே பார்த்து நில்லு."

"எதுக்குடா?"

"நில்லு... சொல்றேன்."

"பால் குக்கர் இப்போ விசில் குடுத்துடும்."

"குடுக்கட்டும். நில்லும்மா."

"இவன் ஒருத்தன்... நேரம் காலம் தெரியாமே..."

செயற்கையாய் சலித்துக்கொண்டே கிழக்கு பார்த்து நின்றாள்.

"நின்னுட்டேன்... என்னடா...?"

"என்னை ஆசீர்வாதம் பண்ணும்மா" சொன்ன அந்த இருபத்தைந்து வயது அழகான ரவி, நெடுஞ்சாண்கிடையாக அம்மா சொர்ணத்தின் கால்களில் விழுந்தான்.

"நல்லா இரு!" ரவியின் தலையைத் தொட்ட சொர்ணம், சிரிப்போடு கேட்டாள், "எதுக்குடா இந்த அவசர ஆசீர்வாதம்?"

"உன் மகனுக்கு வேலை கிடைச்சாச்சும்மா. இதோ நியமன உத்தரவு."

சொர்ணத்தின் கண்களில் நீர் முட்டியது.

"என் ராஜா... நிஜமாவாடா சொல்றே? எந்த ஊர்ல வேலை கிடைச்சிருக்கு?"

"ஆமதாபாத்தில் இருக்கிற கம்பெனியில். அடுத்த வாரத்துக்குள்ளே வந்து சேரும்படியா தகவல் கொடுத்திருக்காங்க. சம்பளம் எவ்வளவு தெரியுமாம்மா?"

"எ... எவ்வளவு?"

"எவ்வளவு இருக்கும்னு நினைக்கிறே?"

"ஆறாயிரம்...?"

"ஏம்மா, நான் படிச்சிருக்கிறது எம்.இ. எலெக்ட்ரானிக்ஸ். லை பார்க்கப் போறதோ இந்தியாவில் பெரிய கம்பெனி . சம்பளத்தை இப்படியா குறைச்சுச் சொல்றது?"

னக்கென்னடா தெரியும்?"

ரி... சொல்றேன், கேட்டுக்கு. மாசச் சம்பளம் எனக்கு த்தி நான்காயிரம் ரூபாய். அலவன்சுகள் தனி. ருக்கத் தனி வீடு. கம்பெனிக்கு போக வர கார்..."

ர்ணம் கண்களை அகல விரித்துக்கொண்டு பிரமித்துப்



போய் மகனைப் பார்த்தாள்.

'இப்படியொரு ராஜ வாழ்க்கைக்காகத்தானே, இருந்த ஒரு வீட்டையும் விற்று ரவியைப் படிக்க வைத்தாள்!'

ரவி அவளுடைய கன்னங்களைத் தட்டினான்.

"என்னம்மா அப்படிப் பார்க்கிறே?"

"இந்த சந்தோஷத்தைப் பகிர்ந்துக்க உங்க அப்பா உயிரோடு இல்லையேன்னு நினைச்சேன்."

"அம்மா! இந்த சந்தோஷ நேரத்துல அப்பாவை நினைச்சு அழ ஆரம்பிச்சுடாதே."

"இது, தபால்லதானே வந்தது?"

"ஆமாம்மா."

"தபால்காரருக்கு ஏதாவது குடுத்தியா?"

"ம், குடுத்தேனே... ஒரு முத்தமும் பத்து ரூபாயும்."

சொர்ணம் கண்ணீர் பொங்கச் சிரித்து, ரவியின் முன்னுச்சி தலைமுடியைப் பிடித்து ஆட்டினாள்.

"சரி... நீ இப்போ உடனடியா ஒரு காரியம் பண்ணனும்."

"என்ன?"

"உனக்கு எப்போ வேலை கிடைக்கும்... தாலிக்காக எப்போ கழுத்தை நீட்டலாம்னு காத்திட்டிருக்கிற மீராவுக்கு போன் பண்ணி மொதல்ல விசயத்தைச் சொல்லு. கேட்டதும் சந்தோஷத்துல அவளுக்கு இறக்கையே முளைச்சிடும்."

பால் குக்கர் விசிலடிக்க...

"இதோ..." என்று பாய்ந்தான், ரவி. மனசுக்குள் மகிழ்ச்சி கன்றுக்குட்டியாய்த் துள்ளியது. இப்படியொரு உத்தரவு வாங்க எத்தனை இரவு தூக்கங்களைத் தியாகம் செய்திருப்பேன்? சினிமாவுக்கு போகாமல், டி.வி. பார்க்காமல், நூலகத்துக்குப் போய் பாட சம்பந்தப்பட்ட

புத்தகங்களைத் தேடிப் பிடித்து படித்து... அதன் சாராம்சங்களை மூளையில் திணித்து, பரீட்சைத் தாள்களில் கொட்டியது... இப்படிப்பட்ட ஓர் வாய்ப்பை ஸ்பரிசிக்கத் தானே?

தெருக்கோடியில் இருந்த பொது தொலைபேசியை நோக்கி நடந்துகொண்டிருந்த ரவிக்கு அந்தக் காலை நேர அழகான தெரு ஒரு சொர்க்கம் போல் காட்சியளித்தது. ஜனங்கள் எல்லோரும் கிரீடம் வைக்காத தேவ தூதர்கள் மாதிரித் தெரிந்தார்கள். வேக நடை போட்டு தொலைபேசியை நெருங்கினான்.

உடல் ஊனமுற்றோருக்கான 'பூத்' அது. விரல்கள் சூம்பிப் போயிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்து சிநேகமாய்ச் சிரித்தான், ரவி. "கமலா... ஒரு போன் பண்ணிக்கிறேன்."

"பண்ணிக்குங்க சார்."

ரவி, பக்கத்தில் இருந்த கண்ணாடி பூத்துக்குள் நுழைந்து ரிசீவரை எடுத்துக்கொண்டான். மீராவின் வீட்டு எண்களை மனதின் மையத்துக்குக் கொண்டுவந்து, டயலில் தட்டினான்.

மறுமுனையில் 'ரிங்' போயிற்று. உடனே ரிசீவர் எடுக்கப் பட்டது.

"அலோ!" அத்தையின் குரல் கேட்டது.

"அத்தே...! நான் ரவி பேசுறேன். அங்கே மீரா இல்லையா?"

"இருக்காளே."

"கொஞ்சம் கூப்பிடுங்க அத்தே."

"என்ன ரவி... அத்தைகிட்டே இரண்டு நிமிடம் பேசக் கூடாதா?"

"சாவகாசமா வீட்டுக்கு வந்து பேசுறேன். இப்போ மீராவைக் ப்பிடுறீங்களா?"

"இதோ... அவளே வந்துட்டா."



அடுத்த சில விநாடிகளில் மீராவின் குரல் கேட்டது.

"அலோ ரவி..." வீணைத் தந்திகளின் மேல் தவறிப் போய் கைவிரல்கள் பட்டுவிட்ட மாதிரி ஒரு சிலிர்ப்பு, மீராவின் குரலில் பரவியிருந்தது.

"மீரா...!"

"ம்..."

"அவசரமா ஒரு முத்தம் கொடு."

"எதுக்கு?"

"சொல்றேன், கொடு."

"அம்மா, சோபாவில் உட்கார்ந்துட்டு என்னையே பார்த்துட்டு இருக்கா?"

"திரும்பி நின்னுக்கிட்டு கொடு."

"சரி, இந்தாங்க. இச்..."

"என்ன...? செல்லாத அஞ்சு பைசாவை பிச்சைக்காரனுக்கு போடுறமாதிரி இப்படி அலட்சியமா முத்தம் தர்றே? நான் சொல்லப்போற விசயத்தைக் கேட்டேனா, என்னை முத்த மழையில் நனைச்சுடுவே."

"மொதல்ல விசயத்தைச் சொல்லுங்க!"

"எனக்கு வேலை கிடைச்சாச்சு."

"அய்...!"

"ஆமதபாத்தில் இருக்கிற கம்பெனியில் வேலை."

"சம்பளம் எவ்வளவு தெரியுமா? இரண்டு டஜன் ஆயிரம்."

"அய்யோ! ரவி, நான் உடனே உங்களைப் பார்க்கணும்."

"முத்த மழையில் நனைய நான் தயார்."

"வீட்டுக்கு இப்ப வர்றேன்."

"வா, என் தேவதையே! வா!" ரவி, ரிசீவரை வைத்து விட்டுத் திரும்பி பூத்தின் கண்ணாடிக் கதவைத் திறக்க

முயன்ற விநாடி—

தலைக்குள் அந்த மாற்றம் நிகழ்ந்தது.

இரத்தம் 'விர்ர்ர்'ரென்று பாய்வது போன்ற உணர்வு. ஏன் இப்படி என்று யோசிப்பதற்குள் மூக்குப் பகுதியில் ஒரு வெப்பம் வலியோடு உற்பத்தியாகி, உள்ளுக்குள் ஏதோ உடைந்தது. நாசித் துவாரங்களிலிருந்து இரத்தத் துளிகள் சிதறின.

'எனக்கு என்னாயிற்று?' ரவி கண்ணாடிக் கதவைத் திறக்க முயன்று, முடியாமல் உடம்பு ஒருக்களித்து கண்ணாடியின் மீதே சரிந்தான்.

'ச்ச்சலீர்ர்!'

தொலைபேசி பூத் பெண் திரும்பிப் பார்த்து, அலற ஆரம்பித்தாள்.

ரவிக்கு நினைவு திரும்பியபோது, தான் மருத்துவமனை சூழலில் இருப்பதை உணர்ந்தான். அது ஓர் ஐ.சி. யூனிட் என்பதற்கு அடையாளமாய் குளிர்சாதனத்தின் செல்லமான உறுமல் கேட்டது. ஒரு பெரிய பஞ்சுத் துணுக்குபோல் நர்சு ஒருத்தி தெரிய, தலைமாட்டில் அந்தக் குரல் கேட்டது.

"என்ன...?"

கண்களை சோர்வாய் உயர்த்தினான். அந்த வழுக்கை மருத்துவர் கலாதரனின் முகம் பார்வைக்குக் கிடைத்தது.

"டாக்...டர்..."

"பேச சிரமமாய் இருந்தா, அப்படியே படுத்துக்கோ!"

"டாக்... டாக்டர்...! என் உடம்புக்கு என்ன?"

"ஒண்ணுமில்லை."

"என் மூக்குல இரத்தம் வந்ததே?"

"அது... அது... சாதாரண பிரச்சினை! உனக்கு வேலை கிடைச்ச சந்தோஷத்தால் ஏற்பட்ட பூரிப்பில் இரத்தக்



குழாய்கள் விரிவடைந்திருக்கு!"

"இது ஐ.சி. யூனிட்தானே...?"

"ஆமா..."

"டாக்டர்! எனக்கு நார்மலா இருக்கிறபட்சத்தில் ஐ.சி. யூனிட்டில் எதுக்காக வெச்சிருக்கீங்க?"

மருத்துவர் பதில் சொல்லுமுன்...

பக்கத்து அறை கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு வெளிப்பட்ட அந்த ஆய்வக ஊழியர், ரவிக்கு நினைவு திரும்பியது தெரியாமல் சட்டென்று அந்த வாக்கியத்தைச் சொன்னார்.

"டாக்டர்...! ரவிக்கு எயிட்ஸ் நோய் இருப்பதை பரிசோதனை உறுதி பண்ணியிருக்கு. அவரை உடனே எயிட்ஸ் நோய் பிரிவுக்கு மாத்தணும்."

## 2

ரவி அதிர்ந்து போய் மருத்துவரை ஏறிட்டான். அவர், முகம் இறுகிப்போய் ஆய்வக ஊழியரை எரிச்சலாய்ப் பார்த்தார். 'நோயாளிக்கு நினைவு திரும்பிவிட்டதா, இல்லையா என்பதைக்கூடக் கவனிக்காமல் இப்படியா உண்மையைப் போட்டு உடைப்பது?' கோபமாய் கண்களால் கேட்ட கேள்விக்கு, ஊழியர் முகம் வெளுத்து, "சார்" என்று முனங்கினார்.

ரவி தடுமாற்றமாய் உடல் நடுங்க எழுந்து உட்கார்ந்தான்.

"டா...டாக்டர்...! எ...எனக்கு எ...எயிட்ஸ் நோயா?"

மருத்துவர் ஓர் ஒப்பனை புன்னகை பூத்தார். "அவர் சொன்னது உன்னைப்பத்தி அல்ல; நீ நார்மல்."

"டாக்டர்... என்கிட்ட எதையும் மறைக்காதீங்க. இவர் என்பேரைச் சொன்னதை நான் கேட்டுட்டேன். எனக்கு எயிட்ஸ் நோயா டாக்டர்?"

மருத்துவர் பெருமூச்சொன்றை விட்டபடி, கவலையோடிய முகத்தோடு தலையாட்டினார்.

"ஆமா... இது எயிட்ஸ் ஆரம்ப நிலை."

"டா...டாக்டர்... இது... எனக்கு எப்படி...?"

"அதை... நீதான் சொல்லணும். எயிட்ஸ் ஒருத்தரைத் தாக்க எத்தனையோ வழிகள் இருக்கு. உனக்கு மோசமான பெண்கள்கிட்டே தொடர்பு இருக்கா?"

"இல்லை..."

"உனக்குக் கல்யாணம்...?"

"இன்னும் ஆகலை."

"எந்தப் பெண்ணோடவாவது சமீபத்துல...?"

"இல்லை."

"பொய் சொல்லக்கூடாது."

"சத்தியமா இல்லை டாக்டர். என் அத்தை பொண்ணு மீராவைக்கூட நான் தொட்டுப் பேசினது இல்லை."

"சமீபத்துல உனக்கு யாராவது இரத்ததானம் பண்ணினாங்களா?"

"இல்லையே..."

"உன் உறவினர்களிலோ, நண்பர்களிலோ யாருக்காவது எயிட்ஸ் நோய் இருக்குதா?"

"இல்லை."

"எயிட்ஸ் தடுப்பு நோய் முகாம் நடக்கிற இடங்களுக்குப் போய் உதவி பண்ணினது உண்டா?"

"இல்லை."



"எதுவுமே இல்லைன்னா எப்படி...? சமீபத்துல உடம்புக்கு முடியாம ஏதாவது ஆஸ்பத்திரியில் படுத்துட்டு இருந்தியா?"

"ஆஸ்பத்திரியில் படுக்கலை. ஆனா..."

"சொல்லு..."

"போன மாசம் ஒரு நாள் சாயந்திரம் எனக்கு திடீர்னு காய்ச்சல் அடிச்சது. மாத்திரை சாப்பிட்டும் காய்ச்சல் கட்டுப்படலை. ரெண்டு தெரு தள்ளியிருந்த ஒரு கிளினிக்குக்கு போனேன். அந்த டாக்டர் எனக்கு ஊசி போட்டார்."

"எந்த டாக்டர்?"

"டாக்டர் சர்வேஸ்வரன்."

"ஊசியை டாக்டர் போட்டாரா, இல்லை நர்சு போட்டாளா?"

"டாக்டர்தான் போட்டார்."

"ஊசியை 'ஸ்டெரிலைஸ்' பண்ணினாரா?"

"பண்ணலை."

"எப்படி அவ்வளவு நிச்சயமாச் சொல்றே?"

"நான் டாக்டர்கிட்டே போனபோது அவர் எங்கேயோ வெளியே கிளம்பிப் போகத் தயாராயிருந்தார். நான் போனதுமே 'டெம்ப்ரேச்சர்' பார்த்துட்டு, ஊசி போடணும்னு சொன்னார். நர்சு, ஊசியை ஸ்டெரிலைஸ் பண்ணப் போகும் போது, 'வேண்டாம்... அதுக்கெல்லாம் நேரமில்லை'ன்னு சொல்லி டாக்டர் ஊசி போட்டார்."

"சந்தேகமே இல்லை. ஸ்டெரிலைஸ் பண்ணாத அந்த ஊசி மூலமாகத்தான் எயிட்ஸ் கிருமிகள் உன் இரத்தத்தில் கலந்திருக்கு. சில டாக்டர்கள் ஊசியை ஸ்டெரிலைஸ் பண்ண சோம்பல் பட்டுக்கிட்டு ஊசியைப் போடுறதால ஏற்படுகிற விபரீதம், இது."

## ஒரே இடத்தில் 11 திரையரங்கம்!

பெங்களூரில் ஒரே வளாகத்தில் 11 திரையரங்கம் திறக்கப்பட்டுள்ளது. அங்கு, நாளும் 18 சினிமா படங்கள் காட்டப்படுகின்றன. அங்கு, சாப்பாடு மட்டுமல்ல... 'பார்' வசதியும் உண்டு.

ரவியின் உடம்புக்கு பாய்ந்துகொண்டிருந் இரத்தமெல்லா சட்டென்று வற்றிவிட் மாதிரியான உணர்வு மண்டைக்குள் நட்சத்திரங் கள் வெடித்தன.

'ஸ்டெரிலைஸ் பண்ணா அந்த ஊசி மூலமாத்தான் எயிட்ஸ் கிருமிகள் உன் இரத்தத்தில் கலந்திருக்கு' இந்த வாசகம் ரவியின் மனசுக்குள் பெரிதாய்க் கோஷமிட்டது.

மருத்துவர் அவனுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்ல வாயைத் திறந்த விநாடி, அவர் முதுகுக்குப் பின்னால் நடைச் சத்தம் கேட்டது.

திரும்பினார்.

கலவர முகமாய் நர்சு.

"டாக்டர்..."

"என்ன லீலா?"

"ஒரு நிமிடம் இப்படி வர்றீங்களா?"

மருத்துவர் அவளைப் பின்தொடர்ந்து அறையின் கோடிக்குப் போனார். நர்சு குரலைத் தாழ்த்திக்கொண்டு சொன்னாள்:

"டாக்டர், ரவிக்கு எயிட்ஸ் நோய் வந்திருக்கிற விசயம் வெளியே காத்திட்டிருக்கிற ரவியோட அம்மாவுக்கும், அந்த அம்மாவோடு வந்த பொண்ணுக்கும் தெரிஞ்சு போச்சு."

"எப்படித் தெரிஞ்சது?"

"நீங்க ரவியோடு பேசிட்டிருந்ததை எப்படியோ



கேட்டுட்டாங்க போலிருக்கு."

"அடேடே..."

"அந்த அம்மாவுக்கு நெஞ்சுவலி வந்துட்டு."

"அந்தம்மா இப்போ எங்கே?"

"பக்கத்து அறையில் படுக்க வெச்சிருக்கு!"

பதற்றப்பட்ட மருத்துவர் வெளியே வந்து, பக்கத்து அறைக்குள் நுழைந்தார். சொர்ணம், அந்த ரப்பர் படுக்கையில் மல்லாத்தி படுக்கவைக்கப்பட்டிருந்தாள். மானிட்டர் 'பீப் பீப்' என்று கத்திக்கொண்டிருந்தது. ஈ.சி.ஜி.யில் இருதயத் துடிப்பு, சுரத்தில்லாமல் தெரிந்தது. தலைமாட்டில் மீரா, சேலைத் தலைப்பை வாயில் பொத்தி, நீர்வழிகிற கண்களோடு விசித்துக்கொண்டிருந்தாள்.

மீராவிடம் மருத்துவர் சிடுசிடுத்தார். "ஐ.சி. யூனிட்டுக்குள் இந்த அம்மா ஏன் வந்தாங்க?"

"மகனைப் பார்க்கணும்ங்கிற ஆசையில்..." மீரா விசித்து விசித்து சொல்லிக்கொண்டிருக்கும்போதே, சொர்ணத்திடம் இருந்து ஒரு மாதிரியான விக்கல் எழுந்தது.

இரண்டுமுறை சுவாசத்திற்காக வாயைத் திறந்து திறந்து மூடிய சொர்ணம், சட்டென்று ஒரு விநாடியில் தலையைத் தொங்கப் போட்டாள். கண்கள் ஒரு பக்கமாய் நிலைத்தன.

ரவி, ஆஸ்பத்திரிக்குக் கொஞ்சம் தள்ளி ஒதுக்குப்புறமாய் இருந்த அந்த அறையில் ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்தபடி— வெளியே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந் தான்.

மருத்துவர், மனநல நிபுணர் மனோவுடன் அந்த அறைக்குள் நுழைந்தார். பக்கத்தில் நின்று கூப்பிட்டார்.

"ரவி..."

அவன் திரும்பவில்லை.

"ரவி..."

அதே நிலைத்த பார்வை.

மனநல நிபுணர் மனோ கேட்டார்: "எத்தனை நா
இப்படி?"

"கடந்த ரெண்டு நாளா."

"அதாவது, அம்மா இறந்த நாளிலிருந்து..."

"ஆமா."

"அம்மா இறந்ததுக்கு அழுதானா?"

"இல்லை. செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்து இ
மாதிரியான பார்வைதான்."

"சாப்பாடு?"

"ரெண்டு நாளாகச் சாப்பிடலை. குளுகோஸ் ஊ
போட்டோம்."

"தூக்கம்..."

"ரெண்டு நாளாகத் தூங்கவேயில்லை. ஜன்னலுக்கு
பக்கத்துல உட்கார்ந்துகிட்டு இதே மாதிரி வெறிச்சு
பார்க்கிறதுதான் வேலை."

"ஒரே நேரத்தில் ரெண்டு அதிர்ச்சி மூளையை
தாக்கியிருக்கு. தனக்கு எயிட்ஸ் நோய் என்கிற விசயமு
அது தெரிஞ்ச அம்மா இறந்துட்ட விசயமும் சேர்ந்து
ஸ்தம்பிக்க வைச்சிருக்கு."

"இந்த ரெண்டு அதிர்ச்சி மட்டுமில்லை மிஸ்டர் மனோ
மூணாவது ஓர் அதிர்ச்சியும் இருக்கு."

"என்ன?"

"ரவியை உயிருக்கு உயிரா காதலிச்ச மீரா, ரெண்டு
நாளா ஆஸ்பத்திரிக்கு வரலை. அதுவும் ரவியோட மனசுல
இருக்கு."



"இவனுக்கு எயிட்சுன்னு தெரிஞ்சதுமே அந்தப் பொண்ணு
நாசூக்கா விலகிட்டா போலிருக்கு."

"வேறு வழி? இந்தக் கால காதலுக்கு அவ்வளவுதான்
வலு..." சொல்லிக்கொண்டே மனோ, பக்கத்தில் போய்
நின்றார்.

"ரவி..."

"........."

"ரவி, என்னைப் பாரு..."

அவன் திரும்பவில்லை.

மனோ, ரவியின் தோளைப் பிடித்து திருப்பினார். உடம்பு
இறுகிப்போய் கல் மாதிரி இருந்தது.

"இங்கே பாரு ரவி..."

முள்முள்ளாய் ரோமம் மண்டிய மோவாயை மனோ
நிமிர்த்தினார். "எதுக்கும் கவலைப்படக்கூடாது, ரவி..."

உயிரில்லாத கண்களால் மனோவைப் பார்த்தான், ரவி.
உதடுகள் மெல்ல அசைந்தன. கடினக் குரலில்— 'ரோபோட்'
தனமாய் வார்த்தைகளை நிறுத்தி நிறுத்திக் கேட்டான்.

"நீ... டாக்டரா?"

"ம்..."

"இவர்...?" பக்கத்தில் இருந்த மருத்துவர் கலாதரனை
சுட்டிக்காட்டி கேட்டான்.

"இவரும் டாக்டர்தான்."

"எனக்கு... ஓர்... ஆசை..."

"என்ன, சொல்லு?"

"இந்த உலகத்துல எந்த டாக்டரும் உயிரோடு இருக்கக்
கூடாது" திடும்மென்று குரலை உயர்த்தி வெறித்தனமாய்க்
கத்திய ரவி, மனோவின் கழுத்தை எட்டிப் பிடித்து—

மூர்க்கமாய் நெரிக்க ஆரம்பித்தான்.

அவன் பிடித்த பிடியில், மனோ நாசித் துவாரங்களி இரத்தம் தெறித்தது.

## 3

மனநல நிபுணர் மனோ, நாசித் துவாரங்களில் இரத்த தெறிக்க, ரவி பிடியிலிருந்து தன்னை உருவிக்கொள் முயன்று தோற்றார். ரவியின் பத்து விரல்களும் ராட்சத தனமாய்க் கழுத்தைப் பற்றியிருக்க, கழுத்தெலும்பு எந் விநாடியும் உடையக்கூடிய அபாயத்தில் இருந்தது. பக்கத்தி நின்றிருந்த மருத்துவர் கலாதரன், சுவரில் பதித்திருந் அழைப்பு மணிப் பொத்தானை அழுத்திவிட்டு, ரவி மே பாய்ந்து, அவன் சட்டை காலரை பிடித்து இழுத்த முதுகில் ஓங்கி பலங்கொண்ட மட்டும் குத்தினார் கோபமான குத்து.

ரவி, அந்த ஆவேசக் குத்தை லட்சியம் செய்யாம மனோவின் கழுத்தை மூர்க்கமாய் நெரித்துக்கொண்டே வெறிபிடித்த மிருகம் போல் வீறிட்டுக் கத்தினான்.

“நான் டாக்டர்களையே வெறுக்கிறேன். இந்த உலகத்துல நீங்களெல்லாம் உயிரோடு இருக்கக்கூடாது.”

“கக்...கக்...கக்...” மனோ, மூக்கிலும் வாயிலும் இரத்தம் வழியத் தத்தளித்தார். கண்கள் பிதுங்கின. கலாதரன் மறுபடியும் ரவி மேல் பாய்ந்து அவனைத் தாக்கும்முன் மனோவைத் தள்ளிக்கொண்டு போய் அவருடைய தலையை அந்த அறையின் கருங்கல் சுவரில் வைத்து மோதினான், ரவி.

‘ச்சொத்!’



மனோவின் பின்மண்டை மோதி இரத்தமாய்ப் பொத்துக் கொண்டது. ஆஸ்பத்திரி ஊழியர்கள் தபதபவென்று ஓடிவந்து ரவி மேல் விழுந்து அமுக்கி, குண்டுக்கட்டாய்த் தூக்கி கட்டிலில் போட்டுக் கயிறால் கட்டினார்கள்.

மருத்துவர் கலாதரன், சுவரோரமாய்ச் சலனமில்லாமல் விழுந்துகிடந்த மனோவை நோக்கி ஓடினார். பின்மண்டையில் இரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது. உடலைப் புரட்டி நாசிக்குப் பக்கத்தில் கை வைத்துப் பார்த்தார்.

நூலிழையாய் சுவாசம்.

இன்ஸ்பெக்டர் கோகுல்நாத்தும், கிரைம் பிராஞ்ச் விஷ்ணுவும், ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தபோது காலை மணி பத்தரை. கலாதரன் எதிர்கொண்டு வரவேற்றார். அறிமுகம் முடிந்தபின் விஷ்ணு கேட்டான்:

“மனோ இப்போ எப்படி இருக்கார்?”

“இன்னும் ஆபத்தான கட்டத்துலதான் இருக்கார். இருபத்தி நாலு மணி நேரம் கழிஞ்ச பிறகுதான் எதுவுமே சொல்லக்கூடிய நிலைமை. ரவி இப்படியொரு அபாய நோயாளியா இருப்பான்னு நான் கொஞ்சம்கூட நினைச்சுப் பார்க்கலை.”

“இப்போ ரவி எங்கே?”

“முன் எச்சரிக்கையா வார்டுக்குக் கொண்டுபோய்த் தனி அறையில் அடைச்சு வச்சிருக்கோம்.”

“வாங்க, பார்க்கலாம்.”

கலாதரன் முன் செல்ல, கோகுல்நாத்தும், விஷ்ணுவும் தொடர்ந்தார்கள். விஷ்ணு கேட்டான், “ரவி, எம்.இ. படிச்சவர்ன்னு கேள்விப்பட்டேன். உண்மையா?”

“ஆமா... அதுவும் தங்கப்பதக்கம் வாங்கியவன். வாழ்க்கை யின் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கவேண்டிய வயதில்

இருக்கிறவன். எக்கச்சக்கமான எதிர்பார்ப்புகளோடு வாழ்க்கையை ஆரம்பிக்க இருந்தவனுக்கு, தனக்கு எயிட்ஸ் நோய்ன்னு தெரிஞ்சதும் மனதளவில் பெரிய பாதிப்புக்கு ஆயிட்டான். உச்சக்கட்டமாகத் தாயோட மரணம், தன்னைக் காதலிச்சவ வந்து பார்க்கலையேங்கிற கோபம், எல்லாமே அவனைப் பாதிச்சிடுச்சு."

"ரொம்ப மோசமா இருக்கே."

"எயிட்ஸ் நோய் தனக்கு வர்றதுக்குக் காரணம் டாக்டர் ஒருத்தர் 'ஸ்டெரிலைஸ்' பண்ணாம ஊசி போட்டதுதான்னு ரவி நம்புறான். அந்த டாக்டர் மேல இருந்த வெறுப்பு எல்லா டாக்டர்களையும் எதிரிகளா நினைக்க வெச்சுடுச்சு. இப்படி டாக்டர்களை பழிவாங்கணும்ங்கிற வெறி ரவியோட மனசுக்குள் இருக்குன்னு தெரிஞ்சிருந்தா, மனோவைக் கூட்டிக்கிட்டு அவன் இருந்த அறைக்குப் போயிருக்க மாட்டேன்."

"ரவியைக் காதலிச்ச பெண்ணோட பேர் என்ன?"

"மீரா."

"அந்த மீரா, ரவியை வந்து பார்க்கவே இல்லையா?"

"இல்லை."

"அந்தப் பெண் இவ்வளவு பட்டவர்த்தனமாய் வெறுப்பைக் காட்டியிருக்க வேண்டாம்."

அந்த வார்டு வந்தது.

நான்கைந்து அறைகள் வரிசையாய்த் தெரிய, அநேகமாய் எல்லாவற்றிலும் எயிட்ஸ் நோயாளிகள் எலும்பும் தோலுமாய் விட்டத்தைப் பார்த்தபடி படுத்துக்கிடந்தார்கள். மரண நிசப்தம்.

அறைகளைக் கடந்து, கடைசி அறைக்கு முன்பாய் வந்து நின்றார்கள்.



உள்ளே—

ரவி, கட்டிலில் குப்புறக் கிடந்தான். சுவரில் ஆங்காங்கே இரத்தத்தால் எழுதப்பட்ட வாசகங்கள்.

**'நான் டாக்டர்களை வெறுக்கிறேன்.'**

விஷ்ணு, மருத்துவரிடம் கேட்டான். "இந்த வாசகங்களை எப்படி எழுதுறார்?"

"ஆட்காட்டி விரலைப் பல்லால் கடிச்சு, வழியுற இரத்தத்தில் எழுதினதுதான் அந்த வாசகங்கள். மேற்கொண்டு அப்படி எழுதாமல் இருக்கத்தான் ரவியோட கைகளைப் பின்பக்கமாகக் கட்டி இருக்கோம்."

"இப்போ ரவிக்கு சுய உணர்வு இருக்கா?"

"இல்லை, ஊசி போட்டு மயக்கத்தில் வெச்சிருக்கோம்."

மருத்துவர், பூட்டைத் திறந்தார்.

உள்ளே நுழைந்தார்கள். அறைக்குள் ஈரவாடை. வெண்டிலேட்டர் வழியாக காற்றும், வெளிச்சமும் வந்தன.

இன்ஸ்பெக்டர் கோகுல்நாத் ஒரு சின்னப் புன்னகையோடு கேட்டார். "திடீர்னு எந்திரிச்சுடமாட்டானே?"

"மத்தியானம் ஒரு மணி வரைக்கும் ரவிக்கு மயக்கம் தெளிய வாய்ப்பில்லை" கலாதரன் சொல்லிக்கொண்டே குப்புறக் கிடந்த ரவியை மெல்லப் புரட்டி, மல்லாத்தினார்.

கோகுல்நாத் ஆச்சரியம் காட்டினார். "ஆள், பார்க்க சினிமா ஹீரோ மாதிரி இருக்கான். இவனா, ஒரு டாக்டரை கொலை செய்கிற அளவுக்குப் போனான்?"

"மயக்க நிலையில் இருக்கும்போது பார்க்கிறதுக்குப் பசு மாதிரி இருக்கான். மயக்கம் தெளிஞ்சாப் போதும், அவனோட முகபாவமே மாறிடும். அவன் பார்க்கிற பார்வையில் கொலைவெறி தாண்டவமாடும். இவன் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படாமே இருந்திருந்தாலாவது ஏதாவது

ஒரு மனநல மையத்தில் சேர்த்திடலாம். இப்போ அதுக்கும் வழியில்லை. மரணம் இவனை நெருங்குகிற வரைக்கும் இங்கே வெச்சுத்தான் சிகிச்சை கொடுத்திட்டு இருக்கணும்.”

“எயிட்ஸ் நோயைக் குணப்படுத்தக்கூடிய மருந்துகளைக் கண்டுபிடிச்சிருக்கிறதா பத்திரிகையில் பார்த்தேன். அந்தச் செய்தி உண்மையா டாக்டர்?”

கலாதரன் தீர்க்கமாய்த் தலையசைத்தார். “இல்லை. இந்த நிமிடம்வரைக்கும் எயிட்ஸ் நோயை முழுமையாகக் குணப்படுத்தக்கூடிய மருந்து உலகத்தின் எந்தப் பகுதியிலும் கண்டுபிடிக்கப்படலை.”

“டாக்டர்களை கொலை செய்யணும்ங்கிற வெறியோட இருக்கிற ரவிக்கு எப்படி சிகிச்சை கொடுக்கப் போறீங்க, டாக்டர்?”

“ரவிக்கு இப்போ தேவைப்படுறது மருத்துவ. சிகிச்சை இல்லை.”

“அப்படின்னா...”

“அவனுக்குத் தேவைப்படுறதெல்லாம் பாசத்தோடு கூடிய பரிவு, உரிமை கலந்த அன்பான வார்த்தைகள்.”

“நீங்க சொல்ற இந்தப் பாசம், பரிவு, அன்பை எல்லாம் ணரக்கூடிய நிலைமையில் ரவி இருக்கானா?”

“இல்லைதான்! ஆனா... அவனைக் காதலிச்ச மீராவால் ந்த அன்பையும் பரிவையும் காட்ட முடிஞ்சா, ரவியோட ாலை வெறியைத் தணிக்கலாம்.”

“மீரா அதுக்கு சம்மதிப்பாளா?”

சம்மதிக்க வேண்டும். நீங்க போலீஸ், சொல்கிற மாதிரி ன்னா அவ கேட்பாள்னு நான் நினைக்கிறேன்.”

ீராவோட முகவரி?”



“எண் 41, பாரதி அடுக்ககம், முத்துகிருஷ்ணன் தெரு, தி.நகர்.”

விஷ்ணு, மீராவின் முகவரியை தன் பாக்கெட் நோட்டில் குறித்துக்கொண்டிருக்கும்போது—

இளம் மருத்துவர் ஒருவர் வேகவேகமாய் அந்த அறைக்குள் நுழைந்தார். கலாதரன், அவரை ஏறிட்டார்.

“என்ன சீனிவாசன்?”

“மனோ இறந்துட்டார், டாக்டர்.”

**ப**னி பெய்துகொண்டிருந்த டிசம்பர் இரவு பத்து மணி.

கோகுல்நாத்தும் விஷ்ணுவும் பாரதி அடுக்கக ஐந்தாவது மாடியில் மீராவுக்கு எதிரே உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்து சோபாவில் மீராவின் அப்பா, அம்மா.

கோகுல்நாத் சொல்லிக்கொண்டிருந்தார் . “இதோ பாரும்மா மீரா, உன் உணர்ச்சிகளை என்னால் புரிஞ்சுக்க முடியுது. ரவி ஒரு எயிட்ஸ் நோயாளியான பிறகு அவனை விட்டு நீ விலகி நிக்கிறது நல்லதுதான். அதைத் தப்புன்னு நான் சொல்லமாட்டேன். ஆனா, ரவி இப்போ எயிட்ஸ் நோயாளி மட்டுமில்லை; ஓர் அபாயகரமான மனநோயாளியும்கூட.

டாக்டர்களைக் கொலை செய்யணும்ங்கிறது அவனோட வெறி. இந்த வெறிக்கு முதல் பலி டாக்டர் மனோ. ரவியோட மனசுக்குள்ளே அந்தக் கொலை வெறி இருக்கக்கூடாது. அதை உடனடியாகக் களையணும். ரவிக்கு ‘ஸ்டெரிலைஸ்’ பண்ணாத ஊசி போட்டதாலதான் எயிட்ஸ் நோய் வந்திருக்கும்ங்கிறது ஒரு யூகம். ஒருத்தருக்கு எயிட்ஸ் நோய் வர எத்தனையோ வழிகள் இருக்கு.”

மீரா பெருமூச்சுவிட்டாள்.

“சரி, நான் இப்போ என்ன பண்ணணும், சார்?”

"தினசரி காலையில் அரை மணி நேரம், சாயந்தரம் அரை மணி நேரம் ஆஸ்பத்திரிக்கு வந்து, ரவியைப் பார்க்கணும். அவன்கிட்ட இருக்கிற கொலை வெறி தணிகிற மாதிரிப் பேசணும்."

மீராவின் அப்பா குறுக்கிட்டார். "இல்ல இன்ஸ்பெக்டர்! என் பொண்ணை நான் அனுப்பமாட்டேன். அந்தப் பயல் இவளை ஏதாவது பண்ணிடுவான்."

"உங்க பொண்ணை அவன் ஒண்ணும் பண்ணமாட்டான். டாக்டர்கள் மேல்தான் அவனுக்கு ஆத்திரம்."

"மீரா மேலேயும் கோபம் இருக்கும்."

"மீரா போய்ப் பேசினா சரியாயிடும்."

"இந்த ஆபத்தான விளையாட்டெல்லாம் வேண்டாம், இன்ஸ்பெக்டர்! என் பொண்ணு, இன்னொருத்தர் வீட்டுக்குப் போகவேண்டியவ... ஒரு எயிட்ஸ் நோயாளியை தினசரி பார்க்கப் போயிட்டிருந்தா அது அவளோட எதிர்கால வாழ்க்கையைப் பாதிக்கும்."

"இது ஒரு நடிப்புத்தான்."

"நடிப்பாகவே இருந்தாலும்..." மீராவின் அப்பா குரலை உயர்த்தி ஆவேசமாய்ப் பேசிக்கொண்டிருந்த விநாடி—

அறையின் மூலையில்— மேசை மேல் இருந்த தொலைபேசி அலறியது.

மீரா எழுந்து போய் ரிசீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு கோகுல்நாத்தைப் பார்த்தாள்.

"சார், போன் உங்களுக்குத்தான். டாக்டர் கலாதரன் பேசுறார்."

கோகுல்நாத் வேகமாய்ப் போய், மீராவின் கையில் இருந்த ரிசீவரை வாங்கி காதுக்குக் கொடுத்தார்.

"என்ன டாக்டர்?"





"என்ன?"

"ரவி, வார்டிலிருந்து தப்பிச்சுட்டான்."

## 4

**கோ**குல்நாத்தும் விஷ்ணுவும் குளிர்காற்றை வெட்டிக் கொண்டு வாகனத்தில் பயணம் செய்து, மருத்துவமனைக்குப் போய்ச் சேர்ந்தபோது— கலாதரன் மற்ற மருத்துவர்களோடு வராந்தாவில் கலக்க முகமாய் நின்றுகொண்டிருந்தார். வார்டு ஜன்னல்களில் நோயாளிகளின் முகங்கள் தெரிந்தன.

விஷ்ணு— கோகுல்நாத் இருவரும் கலாதரனை நெருங்கினார்கள்.

"ரவி, எப்படித் தப்பிச்சான் டாக்டர்?"

"மருத்துவர் ஒருத்தர் ரவிக்கு மயக்க ஊசி போடுறதுக்காக உள்ளே போயிருக்கார். ஏற்கெனவே போட்ட ஊசியோட மயக்கம் தெளியுறதுக்கு முந்தி இன்னொரு ஊசியைப் போட்டுடணும்ங்கிறது நான் கொடுத்திருந்த உத்தரவு. அந்த உத்தரவுபடி ஊசி போட அறைக் கதவைத் திறந்துகிட்டு உள்ளே போயிருக்கார். மயக்கத்தில் இருக்கிற மாதிரிப் படுத்துட்டிருந்த ரவி திடீர்னு எந்திரிச்சு, டாக்டரை தாக்கி— கழுத்தை நெரிச்சிருக்கான். அவர் கீழே சாய்ஞ்சதும் தப்பி ஓடிட்டான்."

"அந்த டாக்டர் இப்போ எங்கே?"

"இறந்துட்டார்."

"எ... என்ன?"



"ஆமா... ரவியோட மூர்க்கமான பிடியில் அந்த டாக்டர் கோபிநாதன் குரல்வளை நசுங்கி, மரணம் ஏற்பட்டிருக்கு."

"பிரேதம் எங்கே?"

"வாங்க."

மருத்துவர் கலாதரன், இருவரையும் கூட்டிக்கொண்டு பக்கத்து அறைக்குள் நுழைந்தார். நீள மேசை மேல் வெள்ளை விரிப்பால் போர்த்தப்பட்டு முகம் மட்டுமே தெரிந்த கோபிநாதனைக் காட்டினார்.

கோகுல்நாத்தும் விஷ்ணும் பிரேதத்தை நெருங்கி, பார்வையைக் கழுத்துப் பகுதியில் போட்டார்கள்.

குரல்வளை சுத்தமாய்ப் பிசையப்பட்டிருந்தது. வலக்கண் ஏறக்குறைய வெளியே வந்து— ஏதோ ஒரு மெல்லிய நரம்பின் உதவியால் தொங்கிக்கொண்டிருந்தது. நாசித்துவாரங்களில் கெட்டியாய் உறைந்துபோன இரத்தம்.

"கொடூரம்...!" விஷ்ணு கண்களை மூடிக்கொள்ள, கோகுல்நாத் திரும்பி, மருத்துவர் கலாதரனை ஏறிட்டார்.

"ரவிக்கு ஊசிபோட கோபிநாதன் மட்டும்தான் போனாரா?"

"ஆமாம்."

"சம்பவத்தை நேரில் யாராவது பார்த்தார்களா?"

"நர்சு பார்வதி, டாக்டர் அலறிய சத்தம் கேட்டுப் பக்கத்து வார்டிலிருந்து ஓடிப்போய்ப் பார்த்திருக்கிறார்."

"அந்த நர்சு எங்கே?"

கலாதரன், அறைக்கு வெளியே எட்டிப் பார்த்து நர்சு பார்வதிக்கு கை அசைக்க— அடுத்த நிமிடம் அந்த நர்சு பார்வதி அதிர்ச்சி உறைந்த முகத்தோடு உள்ளே வந்தாள்.

கோகுல்நாத் கூப்பிட்டார்.

"இங்கே வாம்மா..."

அவள் வந்தாள்.

"என்ன நடந்தது, சொல்லு..."

பார்வதி உலர்ந்துபோன வாயோடு சொல்ல ஆரம்பித்தாள். "மணி ஒன்பதரை இருக்கும். அந்த வார்டுக்கு திரும்பிட்டிருந்தேன். யாரோ மூச்சிரைக்கிற மாதிரி சத்தம் கேட்டது. உடனே ஓடிப்போய் ஜன்னல் வழியாகப் பார்த்தேன். ரவி பிடியில் டாக்டர் கோபிநாதன் மாட்டிக் கிட்டுத் திணறிட்டிருந்தார்.

நான் உடனே சத்தம் போட்டேன். பக்கத்து வார்டுகளில் இருந்த டாக்டர்களும், ஊழியர்களும் ஓடிவர்றதுக்குள்ளே ரவி, கோபிநாதனைக் கீழே தள்ளிவிட்டு— இருட்டுல பின்பக்கச் சுவரை நோக்கி ஓடினான்..."

கலாதரன் குறுக்கிட்டார். "அந்த நிமிடமே எல்லா ஊழியர்களையும் வெளியே அனுப்பி— ரவியை தேடச் சொன்னேன். வெளியே போனவர்கள் இன்னும் வரலை. அவன் ரொம்ப தூரம் ஓடியிருக்க முடியாது, மிஸ்டர் கோகுல்நாத். பக்கத்துலதான் ஏதாவது ஓர் இடத்தில் தான் பதுங்கி இருக்கணும். போலீஸ் ஸ்டேஷனுக்கும் தகவல் சொல்லிட்டேன். அவங்களும் தேடிகிட்டு இருக்காங்க..."

"டாக்டர், ரவியோட கைகளைப் பின்பக்கமா கயிறால கட்டியிருந்தீங்க. அதை அவன் எப்படி அவுத்தான்?"

"அறையிலிருந்த இரும்புக் கட்டிலோட உட்பக்கத் தகட்டுக் கூர்மையை பயன்படுத்திக் கயிறை அறுத்திருக்கிறான். கயிறை அறுத்தவன் அதை வெளிக்காட்டாம மயக்கத்துல இருக்கிற மாதிரி கிடந்து— டாக்டர் உள்ளே வந்ததும் தாக்கி இருக்கான். கட்டிலுக்குக் கீழே ரெண்டு துண்டாய்க் கிடந்த கயிறு பார்வைக்குப் பட்டிருந்தா...



டாக்டர் உஷாராகி இருப்பார்..."

அறையில் இருந்த உள்ளிடப்பேசி கனைத்தது. மருத்துவர் எடுத்தார்.

"ஆமா..."

"........."

"அப்படியா?"

"........."

"எந்த இடம்?"

"........."

"போலீசுக்கும் தகவல் சொல்லியாச்சா? நல்லது. நாங்க இப்பவே புறப்பட்டு வர்றோம்..." ரிசீவரை வைத்த கலாதரன்— கோகுல்நாத்தையும், விஷ்ணுவையும் ஏறிட்டார்.

"ஆஸ்பத்திரி ஊழியர், ரவியை பார்த்துட்டுத் துரத்திட்டுப் போக— ரவி, புதுசா கட்டிகிட்டு இருக்கிற ஒரு பல மாடிக் கட்டிடத்துக்குள்ளே நுழைஞ்சுட்டானாம். போலீசுக்கு தகவல் சொல்லி, கட்டிடத்தை சுற்றி வளைத்துக்கொண்டு இருக்காங்களாம்."

"எந்த இடம்?"

"வேப்பேரி."

புறப்பட்டார்கள்.

"வேப்பேரியில் அந்த பத்து மாடிக் கட்டிடம் சிமெண்டு பூச்சு இல்லாமல், செங்கல் உடம்போடு, நூற்றுக்கணக்கான சாரங்களின் உதவியோடு, இருட்டில்— பெய்கிற பனியில் மசமசப்பாய்த் தெரிந்தது. கட்டிடத்துக்குள் ஒரு பொட்டு வெளிச்சம் இல்லை. மருத்துவமனை ஊழியர்களும், ஒரு ஜீப்பில் வந்து இறங்கிய போலீசாரும் கட்டிடத்து உச்சியை அண்ணார்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

விஷ்ணு கேட்டான்.

"ரவி இந்தக் கட்டிடத்துக்குள் போனதைப் பார்த்தது யாரு...?"

அந்த ஆள் முன்னால் வந்தான்.

"நான்தான் சார்..."

"உன் பேர் என்ன?"

"புஷ்பராஜ் சார்."

"ரவி உன் பார்வைக்கு எப்படிக் கிடைச்சான்?"

"அதோ அந்த டிரான்ஸ்பார்மருக்கு பக்கத்துல இருக்கிற குப்பைத் தொட்டிக்குப் பின்னாடி யாரோ மறைஞ்சு உட்கார்ந்துட்டு இருக்கிற மாதிரி எனக்குத் தெரிஞ்சது சார். பக்கத்துல போய்ப் பார்த்தேன். ரவிதான்.

என்னைப் பார்த்ததும் தலைதெறிக்க ஓட ஆரம்பிச்சான். நான் துரத்தினேன். அவன் இந்த இருட்டான கட்டிடத்துக்குள்ளே புகுந்துட்டான். உடனே அந்தக் கட்டிட வாட்ச்மேனை பார்த்துக்கச் சொல்லிட்டு, போலீசுக்கும், ஆஸ்பத்திரிக்கும் நான் போன் பண்ணினேன்."

"வாட்ச்மேன் யாரு?"

காக்கி உடை அணிந்த அந்தக் கிழவன் முன்னால் வந்தான். கும்பிட்டான்.

விஷ்ணு கேட்டான்.

"இந்த ஆள் போன் பண்ணப் போனப்ப நீ இங்கேதானே இருந்தே...?"

"ஆமாங்க."

"கட்டிடத்துக்குள்ளே போன அந்த ஆள் வெளியே வரலையே?"

"வரலைங்க."

விஷ்ணு, கோகுல்நாத்தை ஏறிட்டான். "என்ன பண்ண



லாம்? போலீஸ் படையை உள்ளே அனுப்பலாமா?"

"வேண்டாம்... [illegible] ரவி [illegible] இருந்து [illegible] ... இந்தக் கட்டிடத்துக்குள்ளே நீயும் நானும் மட்டும் தான் போகப் போறோம்..."

"அங்கிள்...!"

"என்ன விஷ்ணு? பயமா இருக்கா?"

"பயமில்லை."

"பின்னே?"

"அவனைச் சமாளிக்க முடியுமா?"

"முடியும்! அந்த போலீஸ்காரங்கிட்டே இருந்து டார்ச்சை வாங்குங்க."

கலாதரன் குறுக்கிட்டார்.

"மிஸ்டர் கோகுல்நாத், ரவி இப்போ சாதாரண மனநிலையில் இல்லை. கொலை வெறிகொண்ட மனநோயாளி. இருட்டாய் இருக்கிற இந்தக் கட்டிடத்துக்குள்ளே அவன் எங்கே இருக்கான்னு தெரியாது. பட்டத்தில் போய்ப் போறது ஆபத்து. யோசனை பண்ணி, காரியத்தில் இறங்குங்க."

கோகுல்நாத் புன்னகைத்தார்.

"கவலைப்படாதீங்க, டாக்டர். இது மாதிரியான மனநோயாளி குற்றவாளிகளை எப்படி அணுகணும்னு

ராணி முத்து சந்தா விவரம்
ஆறு மாதம் ரூ. 66
ஒரு ஆண்டு ரூ. 120
இரண்டு ஆண்டு ரூ. 225
வெளிநாடுகள்
ஆறு மாதம் ரூ. 450
ஒரு ஆண்டு ரூ. 800
பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை-600 007.

போலீஸ் துறையில் கற்றுக் கொடுத்து இருக்காங்க. ரவியை உயிரோடு கொண்டு வர்றோம்."

விஷ்ணுவும், கோகுல்நாத்தும் 'டார்ச்'களை உயிர்ப்பித்துக் கொண்டு கட்டிடத்தின் முகப்பை நெருங்கினார்கள்.

சரியாகக் கட்டி முடிக்கப்படாத, சிமெண்டு பூச்சில்லாத, செங்கல் படிகளில் டார்ச் வெளிச்ச வட்டத்தின் உதவியோடு மேலே ஏறினார்கள்.

"விஷ்ணு..."

"என்ன அங்கிள்...?"

"நீ இடப்பக்கம் பார்த்துட்டு வா. நான் வலப்பக்கம் பார்த்துட்டு வர்றேன். ஏதாவது உருவம் அசைஞ்சாலோ, சத்தம் கேட்டாலோ உடனே சொல்லு."

"சரி அங்கிள்."

இரண்டாவது மாடித் தளத்துக்கு வந்தார்கள். கரடு முரடான தரை. காலி கோணிகள். தண்ணீர் நிரம்பிய தகர டிரம்கள். சாரம் கட்டுவதற்கு பயன்படும் சவுக்குக் கம்புகள்.

கோகுல்நாத்தும், விஷ்ணுவும் அந்த இடத்தில் கொட்டிக் கிடந்த இருட்டை டார்ச் வெளிச்சத்தில் அங்குலம் அங்குலமாய்த் துழவிப் பார்த்தார்கள்.

ரவி இல்லை.

மூன்றாவது மாடிக்கு வந்தார்கள்.

சிமெண்டு மூட்டைகள் அம்பாரமாய்க் குவிக்கப்பட்டிருக்க, மண்டி இருந்த காற்றில் சிமெண்டு மணம்.

விஷ்ணு மெல்ல கிசுகிசுத்தான். "அங்கிள், இந்த மூட்டைகளுக்குப் பின்னாடி ஆள் ஒண்டியிருக்கலாம். நீங்க அந்தப் பக்கமாகப் போங்க. நான் இந்தப் பக்கமாகப் போய்ப் பார்க்கிறேன்."

பிரிந்தார்கள்.



## 5

கோகுல்நாத்தும், விஷ்ணுவும் டார்ச்களோடு தனித் தனியாய்ப் பிரிந்து, அடுக்கி வைத்திருந்த சிமெண்டு மூட்டைகளுக்குப் பின்னால் பார்வைகளை ஜாக்கிரதையாய்க் கொண்டுபோய், அங்கே மண்டி இருந்த இருட்டை 'டார்ச்' வெளிச்சத்தால் கழுவிப் பார்த்தார்கள்.

ரவி தட்டுப்படவில்லை.

பத்து நிமிட அலசலுக்குப்பின் விஷ்ணு, கிசுகிசுப்பான குரலில் கூப்பிட்டான்.

"அங்கிள்..."

"ம்..."

"ஆள் இந்த மாடியில் இல்லை. மேலே இருக்கிற ஏதாவது ஒரு மாடியில் இருக்கலாம்."

"வா, போய்ப் பார்த்துடுவோம்."

"அங்கிள், ஜாக்கிரதை. நான் முன்னால் போறேன். நீங்க பின்னாடி வாங்க. ரவி திடீர்னு ஏதாவது ஆயுதத்தோடு நம்ம மேல் பாயலாம்.

நான்காவது மாடிக்குப் போகும் படிகளில் ஏறினார்கள். சரியாய்க் கட்டி முடிக்கப்படாத படிகள், காலை இடறிவிட்டன. பூட்ஸ் சத்தம் எழாமல் பூனை நடை நடந்து நான்காவது மாடியின் தளத்துக்கு வந்தார்கள்.

தளம் காற்றோட்டமாய் இருந்தது. அடைசலாய் எந்தச் சாமானும் இல்லை.

ஐந்தாவது மாடிக்குப் போனார்கள். மணலும் செங்கலு குவித்து வைக்கப்பட்டிருக்க, பக்கவாட்டு பகுதியில் மூங்கி

சாரல்கள் ஏராளமாய்த் தெரிந்தன.

"விஷ்ணு..."

"என்ன அங்கிள்?"

"ரவி ஆறாவது மாடிக்குப் போயிருக்க முடியாது. அந்த மாடிக்குப் போக படிகள் இன்னும் கட்டி முடிக்கலை. ஆக, அவன் இந்த மாடியில்தான் ஏதாவது ஒரு பக்கமா இருக்கணும்."

செங்கல் குவியலுக்குப் பின்னால் டார்ச் வெளிச்சத்தைக் கொட்டினார்கள். ரவி இல்லை. மூலை முடுக்குகளில் இருந்த இருட்டைத் துடைத்துப் பார்த்தார்கள்.

காணோம்.

மூங்கில் சாரங்களுக்குப் பக்கத்தில் வந்தார்கள்.

"விஷ்ணு, ஜாக்கிரதை. ஆள் இங்கே ஒளிஞ்சிருக்கலாம்ன்னு என் மனசுக்குப்படுது. மூங்கில் சாரங்கள் இந்த இடத்துல ரொம்பவும் நெருக்கமா இருக்கு..." கோகுல்நாத் சொல்லிக் கொண்டிருந்தபோதே— சாரங்களின் ஒரு பகுதியில் டார்ச் அடித்துப் பார்த்த விஷ்ணு சற்றே பதற்றமானான்.

"அங்கிள்... அங்கே... பாருங்க."

"என்ன?"

கோகுல்நாத் தன் கையில் இருந்த டார்ச் வெளிச்சத்தை அந்தப் பக்கமாய்த் திருப்பினார்.

ஒரு மூங்கில் சாரம் முறிந்து போயிருக்க— அதன் உடைந்த பகுதியில் சட்டை துணியின் கிழிசல் துண்டு தெரிந்தது.

"விஷ்ணு, அதை எடு..."

குனிந்து எடுத்தான்.

டார்ச் வெளிச்சத்தில் அதைப் பார்த்தபோது—

கோணல்மாணலாய் இரத்தத் தீற்றல்கள்.



தொட்டுப் பார்த்தான். இரத்தத்தில் இன்னமும் ஈரம் இருந்தது. "அங்கிள்...! இது ரவியோட துணின்னு நினைக்கிறேன். சாரங்களைப் பிடிச்சு கீழே இறங்கித் தப்பி ஓடியிருக்கணும். அப்படி ஓடும்போது மூங்கில் சாரம் உடைஞ்சு, அதுல சட்டை மாட்டிக் கிழிஞ்சிருக்கணும். சட்டை கிழிஞ்சபோது தோள்பட்டையில் காயம்பட்டிருக்க லாம்..."

கோகுல்நாத் டார்ச் வெளிச்சத்தை சாரங்களின் வழியை கீழே அனுப்பிப் பார்த்தார். சாரங்களைப் பிடித்துக் கொண்டு தரைத்தளம் வரைக்கும் போகும் சாத்தியம் தெரிந்தது.

"விஷ்ணு, நாம மேலே ஏறி வர்றதைத் தெரிஞ்சுகிட்டு ரவி இந்த வழியாகக் கீழே இறங்கிப் போயிருக்கான்."

"இந்த வழி, கட்டிடத்தோட பக்கவாட்டுப் பகுதி. அதனால, கீழே இருக்கிறவங்க, அவன் போனதை பார்த்திருக்க முடியாது. போலீஸ் படையை உடனே அனுப்பி சுற்றுப் பக்கமெல்லாம் தேடச் சொன்னா, ஒருவேளை ஆள் மாட்டக்கூடும்."

"வா, கீழே போகலாம்."

வேகவேகமாய் இறங்கிக் கீழே வந்தார்கள்.

போலீசாருக்கு மத்தியில் காத்திருந்த மருத்துவர் கலாதரன் ஆர்வமாய் முன்னால் வந்தார்.

"ரவி மேலே இருக்கானா?"

"இல்லை. தப்பிச்சுப் போயிட்டான்."

"தப்பிச்சிட்டானா... எப்படி?"

"அஞ்சாவது மாடியில் இருந்த பக்கவாட்டுச் சாரங்களைப் பிடிச்சு கீழே இறங்கிப் போயிருக்கான். இது அவனோட சட்டைதானே?"

விஷ்ணு நீட்டிய அந்த சட்டை கிழிசலைப் பார்த்த கலாதரன் தலையசைத்தார்.

"ஆமா, இது ரவியோட சட்டைதான். உங்களுக்கு எப்படிக் கிடைச்சது?"

"சாரங்களைப் பிடிச்சு கீழே இறங்கும்போது உடைஞ்ச மூங்கிலில் சட்டை மாட்டிக் கிழிஞ்சிருக்கு. இது சட்டையோட தோள்பட்டைப் பகுதி. மூங்கில் சாரத்தைப் பிடிச்சுகிட்டு இறங்கும்போது— தோள்பட்டையில் இரத்தக் காயமும் ஏற்பட்டிருக்கு. சட்டைக் கிழிசலில் பார்த்தீங்களா, இரத்தம்."

கலாதரன் கலவர முகத்தோடு கோகுல்நாத்தையும், விஷ்ணுவையும் ஏறிட்டார்.

"ரவி ஓர் அபாய நோயாளி. அவனை உடனே பிடிச்சாகணும். இல்லேன்னா எந்த நிமிடமும், எந்த டாக்டரும் அவனால் கொல்லப்படலாம். அவன் வெளியே இருக்கிற ஒவ்வொரு நிமிடமும் பேராபத்து."

"கவலைப்படாதீங்க, டாக்டர். ரவி இந்த நிமிடம் ஒரு மனநோயாளி. புத்திசாலித்தனமா அவனால சிந்திக்க முடியாது. இந்தப் பகுதியைவிட்டு அவன் ரொம்ப தூரம் போயிருக்கவும் முடியாது. எப்படியும் அடுத்த ஒரு மணி நேரத்துக்குள்ளே அவனை மடக்கலாம்."

"மிஸ்டர் கோகுல்நாத்! ரவியை நீங்க பிடிக்கிறதுக்கு முந்தி உடனடியா ரெண்டு காரியம் பண்ணனும்."

"சொல்லுங்க."

"டாக்டர்கள் அதிகமா இருக்கிற இடங்களில் போலீஸ் ரோந்துக்கு ஏற்பாடு பண்ணனும்."

"பண்ணிடலாம்."

"அப்புறம்...?"



## முத்திரை பதித்தவர்களின் வரிகள் !



### புல்லுருவிகள் !

மதப் போர்வைக்குள் தங்களைப் பதுக்கிக்கொண்டு, பாதுகாத்துக் கொண்டு, பிறர் உழைப்பில் வாழ்ந்து வரும் புல்லுருவிகளை நான் மிகக் கடுமையாக எதிர்க்கிறேன் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை.

மதம் என்ற திரைக்குப் பின்னால் சோம்பேறிகளும், வீணர்களும் ஒளிந்துகொண்டு மக்களை ஏமாற்றுவதை நான் பலமாகக் கண்டிக்கிறேன்.

—பண்டித நேரு.

"டி.வி.யிலும் ரேடியோவிலும் ரவியைப் பத்தின விபரங்களைச் சொல்லி டாக்டர்களை எச்சரிக்கைப் படுத்தணும்."

"பிரச்சினையே இல்லை. டி.வி.க்கும் ரேடியோவுக்கும் போன் பண்ணி சொல்லிடலாம்."

"உடனடியா நீங்க பண்ண வேண்டிய இன்னொரு முக்கியமான காரியம் இருக்கு மிஸ்டர் கோகுல்நாத்."

"என்ன?"

"ரவிக்கு, டாக்டர் சர்வேஸ்வரன் மேல் எக்கச்சக்க ஆத்திரம். காரணம், அந்த டாக்டர் 'ஸ்டெரிலைஸ்' பண்ணாமல் ஊசியை போட்டதாலதான் தனக்கு எயிட்ஸ் நோய் வந்ததுன்னு நினைச்சுட்டிருக்கான். அது உண்மையாகவும் இருக்கலாம்.

பொய்யாகவும் இருக்கலாம். ஆனா ரவிக்கு டாக்டர் சர்வேஸ்வரன் மேல் பெரிய வன்மமே இருக்கு. அவனுடைய அடுத்த கொலை முயற்சி அவரைக் கொல்லுறதாகக்கூட இருக்கலாம்."

கோகுல்நாத்தின் குரலில் ஓர் அவசரம் தொற்றிக் கொண்டது.

"டாக்டர் சர்வேஸ்வரனின் கிளினிக் எங்கே இருக்கு?"

"மைலாப்பூரில்."

"போன் நம்பர் தெரியுமா, டாக்டர்?"

"தெரியாது."

"டாக்டரோடு வீடு எங்கே?"

"அடையாறில். ஆனால், முகவரி தெரியாது."

"கிளினிக் எந்த இடத்தில்?"

"ஆலீவ் சாலை கடைசியில்."

கோகுல்நாத், விஷ்ணுவை ஏறிட்டார். "விஷ்ணு, நீ உடனே புறப்பட்டு டாக்டர் சர்வேஸ்வரனைப் பாரு. நான் இங்கே மத்த காரியங்களைப் பார்த்துக்கிறேன்."

தலையாட்டிவிட்டு விஷ்ணு நகர்ந்தான்.

அந்த இரவு நேர நிசப்தத்தில்— குழல் விளக்கு வெளிச்சத்தோடு, ஆலீவ் சாலை கடைசியில் இருந்த சர்வேஸ் கிளினிக்குக்கு முன்பாய் 'பைக்'கை நிறுத்தி, கீழே இறங்கினான், விஷ்ணு.

மாடி எதுவும் இல்லாத சிறிய கட்டிடம். போர்டிகோ பகுதியில் ஒரு கார் தெரிந்தது.

உள்ளே நுழைந்தான், விஷ்ணு. வரவேற்பறையில் ஒரு நர்சு தொலைபேசியில் யாரிடமோ பேசிக்கொண்டிருந்தாள். விஷ்ணுவைப் பார்வையில் வாங்கியதும் பேச்சை அவசர அவசரமாய் முடித்துக்கொண்டு வந்து, "எஸ்" என்றாள்.



"டாக்டர் இருக்காரா?"

"நீங்க?"

"போலீஸ். டாக்டரை ஒரு முக்கியமான விசயமா உடனே பார்க்கணும்."

"டாக்டர் ஓர் ஆபரேஷனை முடிச்சுட்டு, பத்து நிமிடத்துக்கு முன்னாடிதான் அவரோட ஓய்வு அறைக்குப் போனார்."

"ஓய்வு அறை எங்கே?"

"பின் பக்கம்..."

"அவர் மட்டும்தான் இருக்காரா? இல்லே, கூட வேறு யாராவது?"

"யாருமில்லை... அவர் மட்டும்தான்."

"ஓய்வு அறைக்கு எப்படிப் போகணும்?"

அவள் வழி சொல்ல— விஷ்ணு போனான். ஏழெட்டு அறைகள் மட்டுமே இருக்கும் கிளினிக், அது. உள்ளே நோயாளிகள் இருப்பதற்கு அடையாளமாய் சலனங்கள் புலப்பட்டன.

விஷ்ணு, கிளினிக்கை கடந்து பின்பக்கம் போனான். தோட்டத்துக்கு மத்தியில் அந்த அறை தெரிந்தது. கண்ணாடி ஜன்னலில் ஜீரோ வாட்ஸ் விளக்கு வெளிச்சமும், வெண்டிலேட்டரின் இடைவெளியில் சுழலும் மின்விசிறியும் பார்வைக்குக் கிடைத்தன.

விஷ்ணு, அறையை நெருங்கினான்.

வெறுமனே கதவு சாத்தியிருந்தது.

"டொக்... டொக்..."

தட்டினான்.

உள்ளேயிருந்து எந்த சத்தமும் வரவில்லை.

விஷ்ணு குரல் கொடுத்தான்.

"டாக்டர்..."

பதில் இல்லை.

'தூங்கிவிட்டாரோ?'

வெறுமனே சாத்தியிருந்த கதவை மெல்லத் தள்ளினான். அது 'ர்ர்ர்ர்'ரென்ற சத்தத்தோடு உள்ளே போயிற்று.

விஷ்ணு, மெல்ல தலையை உள்ளே நீட்டி எட்டிப் பார்த்தான். அதே விநாடி முதுகுக்குப் பின்னால் அந்தக் குரல் கேட்டது.

"யார் நீங்க?"

குரல் கேட்டு விஷ்ணு திரும்பினான்.

வழுக்கைத் தலையோடு அந்த நபர் தெரிந்தார். விஷ்ணு அவரை ஏறிட்டான். "டாக்டர் சர்வேஸ்வரன்?"

"நான்தான்."

விஷ்ணு சின்னதாய் ஒரு பெருமூச்சுவிட்டான். "டாக்டர்! நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். என்பேர் விஷ்ணு. கிரைம் பிராஞ்ச்..."

"என்ன விஷயம்?"

"உள்ளே போய்ப் பேசுவோமா?"

"பிளீஸ், வாங்க."

உள்ளே போனார்கள். சர்வேஸ்வரன் ஒரு நாற்காலியைக் காட்டிவிட்டு கட்டிலில் உட்கார்ந்தார். "இந்நேரம் வரை அறையில்தான் இருந்தேன். இப்பத்தான் 'டாய்லெட்' போயிட்டு வந்தேன். என்ன விசயமா வந்திருக்கீங்க, மிஸ்டர் விஷ்ணு?"

விஷ்ணு அதற்குப் பதில் சொல்லாமல், குறுமேசை மேல் இருந்த தொலைபேசியைப் பார்த்தான்.



"ஒரு போன் பண்ணிக்கலாமா, டாக்டர்?"

"பிளீஸ்... பண்ணிக்கங்க."

விஷ்ணு, ரிசீவரை எடுத்துக்கொண்டு— எண்களைத் தட்டி மறுமுனையில் கோகுல்நாத்தைப் பிடித்தான்.

"அங்கிள்! டாக்டர் சர்வேஸ்வரன் கிளினிக்கிலிருந்து பேசுறேன். டாக்டர் பத்திரமா இருக்கார். கவலைப்பட எதுவுமில்லை."

மறுமுனையில்—

கோகுல்நாத்தின் குரலில் தீப்பற்றிக்கொண்ட மாதிரியான பதற்றம்.

"விஷ்ணு, டாக்டர் சர்வேஸ்வரனை பத்திரமா இருக்கச் சொல்லிட்டு நீ உடனே புறப்பட்டு மீராவோட வீட்டுக்கு வா."

"மீரா வீட்டுக்கா...! எதுக்கு?"

"மீரா இப்போ உயிரோடு இல்லை."

"அ... அங்கிள்! என்ன சொல்றீங்க?"

"ஆமா... அவள் கொலை செய்யப்பட்டுவிட்டாள். ரவியோட கொலை வெறிக்கு மூணாவது பலி மீரா.

விஷ்ணுவின் கையிலிருந்த ரிசீவர் மெலிதாய் ஒரு நடுக்கத்துக்கு உட்பட்டது.

## 6

விஷ்ணு, ரிசீவரை வைத்துவிட்டு, டாக்டர் சர்வேஸ்வரனைக் கவலைதோய்ந்த ஒரு பார்வையோடு பார்த்தான்.

"டாக்டர்... உங்களுக்கு ரவியைத் தெரியுமா?"

“ரவி...!” என்று குரலை இழுத்து யோசித்த அவர், தன் வழுக்கைத் தலையை ஆட்டினார். ‘தெரியலையே?’

“போன மாசம் அந்த ரவி, காய்ச்சலுக்காக உங்ககிட்ட வந்து சிகிச்சை எடுத்துட்டுப் போயிருக்கான். நீங்க அவனுக்கு ஊசி போட்டிருக்கீங்க...”

“இருக்கலாம்... எனக்கு ஞாபகமில்லை. ஒரு நாளைக்கு எத்தனையோ பேர் வர்றாங்க. எல்லோரையும் ஞாபகம் வெச்சுட்டிருக்க முடியுமா? ஆமா, நீங்க சொன்ன அந்த ரவிக்கு இப்ப என்ன பிரச்சினை?”

“பெரிய பிரச்சினை.”

“என்ன சொல்லுறீங்க?”

“எயிட்ஸ் நோயால் ரவி பாதிக்கப்பட்டிருக்கான்.”

ஓர் அதிர்ச்சி, மருத்துவரின் சதைப்பிடிப்பான முகத்தில் பரவியது.

விஷ்ணு தொடர்ந்தான். “அது மட்டுமில்லை. ரவி இந்த நிமிடம் கொலை வெறி பிடித்த ஒரு மனநோயாளி. டாக்டர்களையெல்லாம் கொல்லணும்ங்கிற வெறி அவனை உசுப்பி விட்டிருக்கு. இதுவரைக்கும் அவனோட கொலை வெறிக்கு ரெண்டு டாக்டர்களும் ஒரு பெண்ணும் பலியாகி இருக்காங்க.”

சர்வேஸ்வரன் முகத்தில் இப்போது வியர்வை.

“ரவிக்கு ஏன் இந்தக் கொலை வெறி?”

விஷ்ணு இரண்டு நிமிடம் செலவழித்து, நடந்த விவரங்களைச் சொல்ல, சர்வேஸ்வரனின் தொண்டை உலர்ந்து போயிற்று.

“நான் ‘ஸ்டெரிலைஸ்’ பண்ணாமல் ஊசி போட்டதுதான் ரவியோட எயிட்சுக்கு காரணங்கிறதை நான் ஏத்துக்க மாட்டேன். ஒருத்தருக்கு எயிட்ஸ் வர எத்தனையோ



காரணங்கள் இருக்கு. நான் ‘ஸ்டெரிலைஸ்’ பண்ணாத ஊசியைப் போட்டதால்தான் ரவிக்கு எயிட்ஸ் நோய் வந்திருக்குன்னு சொல்லுறது அபத்தம்.”

“இருக்கலாம் டாக்டர், இப்போ பிரச்சினை அது இல்லை. ரவி எயிட்ஸ் நோயாளி மட்டுமில்லை. கொலை வெறி பிடிச்ச அபாய நோயாளி. தனக்கு யார் யாரைப் பிடிக்கலையோ அவங்களையெல்லாம் தீர்த்துக்கட்டுற வெறியோடு ஆஸ்பத்திரியைவிட்டுத் தப்பிச்சு போயிருக்கான். தனக்கு எயிட்ஸ் நோய்ன்னு தெரிஞ்சதுமே ஒதுங்க ஆரம்பிச்ச தன் காதலி மீராவை இப்போ தீர்த்துக்கட்டியிருக்கான்.”

சர்வேஸ்வரன் குரல் நடுங்கக் கேட்டார்.

“அப்படீன்னா... ரவி என்னையும் கொலை பண்ண முயற்சிப்பான்னு சொல்ல வர்றீங்களா?”

“ஆமா! ‘ஸ்டெரிலைஸ்’ பண்ணாம ஊசி போட்டதுதான் எயிட்ஸ் வந்ததுக்குக் காரணம்ன்னு ரவி மனசுல ஆழமாகப் பதிஞ்சிருக்கு. அவன் எந்த நிமிடமும் இங்கே வரலாம்.”

சர்வேஸ்வரனின் முன் வழுக்கைத் தலையில் இப்போது சொதசொதவென்று வியர்வை.

விஷ்ணு தொடர்ந்தான். “போலீசார் ரவியைப் பிடிக்கிற வரைக்கும் நீங்க கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கணும். வெளியே எங்கேயும் போயிட வேண்டாம். உங்களுக்கு பாதுகாப்பு தர ஏற்பாடு பண்ணிடுறேன்.”

“நன்றி மிஸ்டர் விஷ்ணு. ரவியை ரெண்டு நாளைக்குள் பிடிச்சுடுவீங்களா?”

“நாளைக்குப் பொழுது விடியுறதுக்குள்ளே பிடிச்சாகணும். அவன் வெளியே இருக்கிற ஒவ்வொரு நிமிடமும் ஆபத்து. எந்த நிமிடமும் ஏதாவது ஒரு டாக்டர் அவனால தீர்க்கப்படலாம்.”

“கடவுளே!”

சர்வேஸ்வரன் அவதியாய் எச்சில் விழுங்கினார். அவருடைய இதயப் பிரதேசம் இப்போது யுத்தகளமாய் மாறியிருந்தது.

**வி**ஷ்ணு, மீராவின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தபோது, அந்தத் தெருவே விழித்திருந்தது. மற்ற வீடுகளின் எல்லா கண்ணாடி ஜன்னல்களிலும் வெளிச்சம் ஒட்டியிருந்தது. பிரதான வாசலில் போலீஸ் ஜீப். கொஞ்சம் தள்ளி ஓர் ஆம்புலன்ஸ். அதற்குப் பக்கத்தில் கறுப்பு வர்ணப் பூச்சோடு ஒரு பிரேத வேன்.

லிப்டில் உயர்ந்து ஐந்தாவது மாடிக்குப் போனான், விஷ்ணு. காற்றில் அழுகைக் குரல். வராந்தாவில் பெண்கள் கூட்டம்.

கோகுல்நாத், விஷ்ணுவை எதிர்கொண்டார்.

"டாக்டர் சர்வேஸ்வரன் பாதுகாப்பாக இருக்காரா?"

"இருக்கார். அவரோட பாதுகாப்புக்கு ஏற்பாடு பண்ணிட்டுதான் வந்தேன், அங்கிள்."

"ரவி ரொம்பவும் வேகமா இருக்கான்."

"மீராவை எப்படி....?"

"வந்து... காலிங் பெல் கொடுத்திருக்கான். கதவைத் திறந்த மீராவை வெளியே இழுத்து, வாயைப் பொத்தி, கழுத்தை நெரிச்சிருக்கான். மீராவோட அம்மாவும் அப்பாவும் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்க்கிறதுக்குள்ளே ஓடிட்டான். இராத்திரி வேளையில் எல்லாரும் தூங்கிட்டிருந்ததால, சம்பவம் நடந்தப்ப யாரும் உதவிக்கு வரமுடியலை."

விஷ்ணு, கோகுல்நாத்தைத் தொடர்ந்து வீட்டுக்குள் நுழைந்தான். தலைவிரி கோலமாய் அழுதுகொண்டிருந்த மீராவின் அம்மாவைச் சுற்றி பெண்கள் கூட்டம். பக்கத்திலேயே இடிந்த நிலையில் மீராவின் அப்பா.



முன் அறையில் இடப்பக்க ஓரத்தில் மீராவின் உடல் மல்லாந்து தெரிந்தது. போலீஸ் போட்டோகிராபரின் கையிலிருந்த காமிரா அவ்வப்போது வெளிச்சப் பூக்களை உதிர்த்துக்கொண்டிருந்தது.

விஷ்ணு மெல்ல நடந்துபோய், மீராவின் தலைமாட்டில் நின்றான். நைட்டி அணிந்திருந்த மீராவின் மென்மையான கழுத்து மூர்க்கமாய்ப் பிசையப்பட்டதில் கன்றிப்போய்த் தெரிந்தது. வலது நாசி துவாரத்தில் இரத்தம் கருஞ்சிவப்பில் உறைந்து போயிருந்தது. பல்வரிசை கிட்டிப் போயிருக்க, நுனி நாக்கு சற்றே கோரமாய் வெளித் தள்ளியிருந்தது. கன்னத்திரட்சிகளில் கோடு கோடாய் நகங்கள் உண்டாக்கிய இரத்தக் கீறல்கள். இடப்பக்க காது துவாரத்தில் வழிந்த இரத்தம் தரையை நனைத்திருந்தது.

கோகுல்நாத்தை ஏறிட்டான், விஷ்ணு.

"சம்பவம் நடந்தது குறித்து மீராவோட அப்பாவை விசாரணை பண்ணினீங்களா அங்கிள்?"

"ம்... பண்ணினேன்."

"சம்பவம் எப்படி நடந்ததுன்னு சொன்னார்?"

"காலிங் பெல் சத்தம் கேட்டதும், சோபாவில் தூங்காமல் படுத்துட்டிருந்த மீரா எழுந்து போய்க் கதவைத் திறந்து பார்த்திருக்கா. உள்ளே படுத்துட்டிருந்த மீராவோட அப்பா, வந்திருக்கிறது யாரும்மா?'ன்னு குரல் கொடுத்திருக்கார்.

குரலுக்கு பதில் வராம போகவே, எந்திரிச்சுப் பார்க்க வந்திருக்கார். வராந்தாவில் மூச்சுத் திணறுகிற சத்தம் கேட்டிருக்கு. அங்கே போய் சேர்றதுக்குள்ளே மீராவோட காரியத்தை முடிச்சுட்டு ரவி ஓடியிருக்கான்."

"ரவியை அவர் பார்த்தாரா?"

"ம்... பார்த்திருக்கார்."

"இவனோட கொலைவெறி எதுவரைக்கும் போய்

நிற்கும்ன்னு தெரியலையே...?"

"விஷ்ணு! நீ உடனடியா ஒரு காரியம் பண்ணணும்."

"என்ன அங்கிள்?"

"டாக்டர்கள் சங்கத்துக்கு இப்போ யார் தலைவர்?"

"டாக்டர் பாண்டியன்."

"அவரை உடனே தொடர்புகொண்டு, இங்கு இருக்கிற அத்தனை டாக்டர்களோட டெலிபோன் நம்பரை வாங்கு."

எதுக்கு அங்கிள்?"

"அத்தனை டாக்டர்களையும் போனில் எச்சரிக்கத்தான். இப்போதைக்கு நம்மால பண்ணக்கூடிய காரியம் இது ஒண்ணுதான்."

"இன்னொரு காரியத்தையும் பண்ணலாம், அங்கிள்."

"என்ன?"

"நாளைக்குக் காலையில் வர்ற எல்லா பத்திரிகையிலும் ரவி பற்றிய தகவலை கொடுத்து, டாக்டர்களை எச்சரிக்கையாக இருக்கச் சொல்லலாம்."

"இதுவும் நல்ல யோசனைதான். உடனே, பத்திரிகைகளுக்கு செய்தியைச் சொல்லிடு."

விஷ்ணு, தலையாட்டிவிட்டு நகர்ந்தான்.

மறுநாள் காலை ஒன்பதரை மணி.

மருத்துவர் கலாதரனின் மேசைமீது அன்றையக் காலை தினசரிகள் இரைந்து கிடக்க, முதல் பக்கத்திலேயே ரவியின் புகைப்படத்தோடு அந்தச் செய்தி இடம் பிடித்திருந்தது.

**நகரில் அபாய எயிட்ஸ் நோயாளி!**

**டாக்டர்களை குறிவைத்துக் கொல்லும் வெறியன்!**

செய்தித்தாளைகளைப் புரட்டிக்கொண்டே எதிரில் உட்கார்ந்திருந்த கோகுல்நாத்தை ஏறிட்டார், கலாதரன்.



"பத்திரிகைக்காரங்களுக்கு அல்வா கிடைச்ச மாதிரி ஆயிடுச்சு. இனி நாலைஞ்சு நாளைக்கு சகலத்தையும் மறந்துடுவாங்க."

"ஆனா, இந்நேரம் தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை டாக்டர்களுக்கும் விசயம் தெரிஞ்சிருக்குமே?"

"ஆமா... ரவி, சென்னையைவிட்டு வெளியே போயிருப்பான்னு நினைக்கிறீங்களா?"

"போயிருக்க வாய்ப்பில்லைன்னுதான் தோணுது."

"டொக்... டொக்..."

அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"மீராவோட பிரேத பரிசோதனை அறிக்கை வந்துடுச்சுன்னு நினைக்கிறேன். எஸ்... வாங்க."

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தவர், ஆய்வக ஊழியர்.

"வாங்க வில்லியம்."

அந்த வில்லியம் முகம் ஒருவித இறுக்கத்துக்கு உட்பட்டு இருந்தது. உடம்பில் சன்னமாய்ப் பதற்றம். குரலில் நடுக்கம்.

"டா... டா... டாக்டர்..."

"என்ன வில்லியம்ஸ்... ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? ஏதாவது பிரச்சினையா?"

"த... த... தப்பு ப... ப... பண்ணிட்டேன் டாக்டர்."

"தப்புப் பண்ணிட்டீங்களா?"

"ஆமா... பெரிய தப்பு."

"சொல்லுங்க... என்ன பண்ணினீங்க?"

"ரவி உடம்பிலிருந்து எடுத்த இரத்தத்தைச் சோதனை செய்யறதுக்கு பதிலாய்..."

"பதிலாய்...?"

"வேற ஒரு நோயாளியோட உடம்பிலிருந்து எடுத்த





இரத்தத்தை பரிசோதனை பண்ணி உங்ககிட்ட தப்பா அறிக்கை கொடுத்துட்டேன்."

கோகுல்நாத் அதிர்ச்சியாய் நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

**காசநோய் ஆபத்து!!**

காசநோய் ஆபத்தானது. காசநோயால் உலகில் நிமிடத்துக்கு ஒருவர் உயிரிழக்கிறார். ஆண்டுக்கு 5 இலட்சம் பேர் சாகிறார்கள்.

"அ...' அப்படின்னா ரவிக்கு எயிட்ஸ் நோய் இல்லையா?"

"ஆமா! அவருக்கு எந்த நோயும் இல்லை."

அறைக்குள் இப்போது கனத்த நிசப்தம்.

## 7

**கோ**குல்நாத், எரிச்சல் மேலிட அந்த ஊழியரை ஏறிட்டார்.

"நீங்க பண்ணியிருக்கிறது எவ்வளவு பெரிய விபரீதமான காரியம் தெரியுமா?"

"சாரி சார்..."

"என்ன சாரி? இப்படி சாரி சொல்லிட்டா எல்லாம் சரியாயிடுமா? நீங்க பண்ணின தப்பால் ரவிங்கிற ஓர் அற்புதமான இளைஞனோட வாழ்க்கை இன்னிக்கு திசைமாறிப் போயிருக்கு. ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கி, ஒரு சந்தோஷமான வாழ்க்கைக்குத் தயாரா இருந்தவனை உங்க அறிக்கை, நரகத்தில் தள்ளி இருக்கு.

ரெண்டு நாளைக்கு முந்திவரை ரவி தங்கப்பதக்கம் பெற்ற ஒரு எம்.இ. பட்டதாரி. ஆனா, இன்னிக்கு... அபாய

நோயாளி. ரெண்டு டாக்டர்களை கொலை பண்ணி இருக்கான். அது மட்டுமில்லை. தன்னை உயிருக்கு உயிராக காதலிச்ச பொண்ணையும் தீர்த்துக்கட்டி இருக்கான் அதுக்கெல்லாம் காரணம், உங்க தப்பான அறிக்கை."

அந்த வில்லியம் கண்ணீரோடு கைக்கூப்பினான். "சார்... நான் பண்ணினது மன்னிக்க முடியாத குற்றம்தான். நான் நினைச்சிருந்தா இதை மறைச்சிருக்க முடியும். ஆனா அந்த எண்ணம் எனக்குத் தோணலை. ரவியைக் கண்டுபிடிச்சு இந்த உண்மையைச் சொல்லி, அவனைப் பழைய நிலைக்குக் கொண்டு வரணும்ங்கிறதுதான் என்னோட ஆசை."

கலாதரன் கோபமாய்க் குறுக்கிட்டார்.

"ரவியை இனி புது மனிதனா ஆக்குறதா? அது எப்படி முடியும் வில்லியம்? ஏற்கெனவே மூணு கொலை பண்ணியிருக்கான். இன்னமும் கொலை வெறி பிடிச்சு அலைஞ்சுட்டிருக்கான். ரவி கைக்குக் கிடைத்தாலும், அவன் போக வேண்டிய இடம் ஜெயில்தான்."

கோகுல்நாத் கவலையாய் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார். "இப்ப என்ன செய்யறதுன்னு தெரியலையே...! ரவிக்கு எயிட்ஸ் நோய் இல்லைங்கிற விபரம் இப்போ வெளியே தெரிஞ்சா பொதுமக்கள் மத்தியில் அது பெரிய கொந்தளிப்பையே உண்டாக்கும். இந்த ஆஸ்பத்திரியை தரைமட்டம் பண்ணினாலும் ஆச்சரியப்படுறதுக்கு இல்லை."

வில்லியம் குரல் தழுதழுத்தார். "சார்... நீங்க என்னைக் கைதுபண்ணி கோர்ட்டுல நிறுத்தி, என்ன தண்டனை வாங்கிக் கொடுத்தாலும் ஏத்துக்கிறேன்."

"அந்தச் சட்டப்படியான நடவடிக்கை உங்கமேல நிச்சயம் உண்டு, வில்லியம். ஆனா, இப்போ அது முக்கியமில்லை. ரவியை மொதல்ல கண்டுபிடிக்கணும். மனநோயிலிருந்து குணப்படுத்தி, அவன் மனசுல இருக்கிற



கொலை வெறியைத் துடைக்கணும்."

கலாதரன், கோகுல்நாத்தை ஏறிட்டார். "என் மனசுக்குப் பட்டதை நான் சொல்லட்டுமா, மிஸ்டர் கோகுல்நாத்?"

"ம்... சொல்லுங்க."

"ரவிக்கு தான் ஓர் எயிட்ஸ் நோயாளி இல்லைங்கிற உண்மை தெரிஞ்சா அவனோட கொலை வெறி தணியலாம்."

"எதையும் புரிஞ்சுக்கக்கூடிய நிலைமையில்தான் அவன் இல்லையே, டாக்டர்."

"ஆமா... உண்மைதான். ஆனால், ரவி— நீங்க மனசுல நினைச்சுட்டிருக்கிற மாதிரியான மனநோயாளி இல்லை."

"எப்படி?"

"மனநோயாளிகளில் ரெண்டு வகை இருக்காங்க. ஒருவகை, அநேகமா தன்னைப் பத்தியோ... தன்னைச் சார்ந்தவங்களைப் பத்தியோ எந்தவித ஞாபகமும் இல்லாம இருப்பாங்க.

ஆனா, இன்னொரு வகை அப்படி இல்லை. தான் யாருங்கிறது தெரியும். தன்னைச் சுத்தி இருக்கிறவங்க யார்யாருன்னும் தெரியும். தனக் ப் பிடிச்சவங்க யாரு, பிடிக்காதவங்க யாரு... இப்படி எல்லா விசயமும் அவங் களுக்குத் தெரியும். ரவிக்கு டாக்டர்களைப் பிடிக்கலை. ஆக, ெ ண்டு பேரைக் கொலை பண்ணிட்டான். அதேபோல் அவனை உதாசீனம் பண்ணின மீராவையும் தீர்த்துக்கட்டி இருக்கான்."

"டாக்டர், இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"ரவிக்கு எய்ட்ஸ் நோய் இல்லைங்கிற விசயத்தை உடனடியா அவனுக்குத் தெரியப்படுத்தணும்."

"எப்படித் தெரியப்படுத்துறது? அவன் நம்ம கைக்குக் கிடைக்கணுமே?"

“வேண்டியதில்லை. விசயம் அவரோட பார்வைக்கோ, காதுக்கோ போனால் போதும்.”

“அதுக்கு வழி?”

“பத்திரிகையும், டி.வி.யும் இருக்கே. ரவிக்கு எயிட்ஸ் நோய் இல்லைங்கிற விசயத்தை அந்த ரெண்டு சாதனங்கள் மூலம் தெரியப்படுத்தினா போதும்.”

“டாக்டர்! ரவி இப்போ பத்திரிகை படிக்கக்கூடிய நிலைமையிலோ, டி.வி. பார்க்கக்கூடிய சூழ்நிலையிலோ இருப்பான்னு நினைக்கிறீங்களா?”

“இது ஒரு முயற்சிதான். நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, அவன் சாதாரண மனநோயாளிதான். தான் செய்த கொலைகளைப் பத்தி பத்திரிகையில் போட்டிருக்காங்கன்னு தெரிஞ்சுக்கிறதுக்கோ, டி.வி.யில் என்ன சொல்லுறாங்கன்னு பார்க்கிறதுக்கோ அவன் ஆர்வப்படலாம்.”

கோகுல்நாத் கண்களை மூடி சில விநாடி யோசித்துவிட்டு ஏறிட்டார்.

“சரிதான் டாக்டர். ஆனா, என்னோட பயம் என்னன்னா...”

“சொல்லுங்க.”

“ரவிக்கு எயிட்ஸ் நோய் இல்லைங்கிற விபரம் வெளியே தெரிஞ்சா பொதுமக்கள் கொந்தளிப்பாங்க. இது மாதிரியான சந்தர்ப்பங்களுக்காகவே காத்திட்டிருக்கிற எதிர்க்கட்சிகள் போராட்டம், ஊர்வலம்ன்னு ஆரம்பிப்பாங்க.”

“அந்தச் சலசலப்பெல்லாம் ரெண்டு நாளைக்குத்தான் இருக்கும். வேறு ஏதாவது பிரச்சினை கிடைச்சுட்டா, ஜனங்க இதை மறந்துடுவாங்க. ரவி மேற்கொண்டு டாக்டர்களை பழிவாங்குறதுக்கு முந்தி அவனுக்கு எயிட்ஸ் நோய் இல்லைங்கிற விசயம் போய்ச்சேரணும்.”



“நான் எதுக்கும் கமிஷனர்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கிறேன். நாளைக்கு ஏதாவது பிரச்சினைன்னா அதை சந்திக்க வேண்டியது வருமே?”

தொலைபேசி அடித்தது.

கலாதரன், ரிசீவரை எடுத்துச் செவிமடுத்துவிட்டு கோகுல்நாத்திடம் நீட்டினார்.

“மிஸ்டர் விஷ்ணு பேசுகிறார்.”

கோகுல்நாத், ரிசீவரை வாங்கி, “என்ன விஷ்ணு?” என்று கேட்டார்.

“அங்கிள்...! ரவி இருக்கிற இடம்பற்றி ரெண்டு நிமிடத்துக்கு முன்தான் தகவல் வந்தது.”

“எங்கே?”

“கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி வளாகத்துக்குள்ளே பதுங்கி இருக்கான்.”

“தகவல் கொடுத்தது யாரு?”

“தெரியலை. கல்லூரியிலிருந்து போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் வந்திருக்கு. கட்டுப்பாட்டு அறையிலிருந்து உடனடியா எனக்குத் தகவல் கொடுத்தாங்க.”

“விஷ்ணு...! ரவி விவகாரத்தில் இப்போ ஒரு புதிய பிரச்சினை...”

“என்ன பிரச்சினை, அங்கிள்?”

“ரவி எயிட்ஸ் நோயாளி இல்லை, ஆய்வக ஊழியர் வில்லியம் தப்பான அறிக்கை கொடுத்திருக்கார். அதைப் பத்திதான் நானும் டாக்டரும் பேசிட்டிருக்கோம். ரவிக்கு இந்த உண்மையைத் தெரியப்படுத்திட்டா, அவன் மனசுல இருக்கிற கொலைவெறி போயிடும்னு டாக்டர் சொல்றார்.”

“ரவிக்கு எயிட்ஸ் நோய் இல்லைங்கிற விசயம் இனிமே

எந்தப் பயனையும் கொடுக்கப் போறதில்லை, அங்கிள். அந்தச் செய்தி, ரவியை சந்தோஷப்படுத்துறதுக்குப் பதிலாக கோபத்தை அதிகரிக்கலாம். அந்தக் கோபம் பல விளைவு களை ஏற்படுத்தலாம்."

"வேறு வழியில்லை, விஷ்ணு. தனக்கு எயிட்ஸ் நோய் இல்லை என்ற விசயம் ஒருவேளை அவனைச் சாந்தப் படுத்தலாம். எதற்கும் நான் கமிஷனரிடம் ஒரு வார்த்தை கேட்டுட்டு, மருத்துவக் கல்லூரிக்கு வர்றேன். நீயும் வந்து சேரு."

"சரி, அங்கிள்."

கோகுல்நாத், ரிசீவரை வைத்துவிட்டு கலாதரனை ஏறிட்டார்.

"ரவி, மருத்துவக்கல்லூரியில் ஒளிந்துகொண்டிருப்பதாகத் தகவல்."

"இது ஒரு நல்ல வாய்ப்பு, மிஸ்டர் கோகுல்நாத்... ரவி ஒளிஞ்சுட்டிருக்கிற கட்டிடப் பகுதியில் ஒலிபெருக்கி வைத்து அவனுக்கு எயிட்ஸ் நோய் இல்லைங்கிற அறிவிப்பை மைக் மூலமா கொடுக்கலாம். அவன் சரணடைந்துவிட்டால் எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்கிற உறுதிமொழியையும் தரலாம்."

"இந்த அறிவிப்புக்குப் பலன் கிடைக்கும்னு நம்புறீங்களா, டாக்டர்?"

"நிச்சயமா."

மருத்துவக்கல்லூரி வளாகம் நெருப்புப் பற்றிக்கொண்ட மாதிரியான பதற்றத்தில் இருந்தது. நூல்நிலையமும், சோதனைக் கூடமும் இணைந்த கட்டிடத்துக்கு முன்பாய் கல்லூரியைச் சேர்ந்த மாணவ— மாணவிகளும், பேராசிரியர் களும் மருத்துவர்களுமாய் பெரிய கும்பல் நின்றிருந்தது.





"ஞாபகமறதி அதிகமாயிட்டே வருது!"

"இப்போ எப்படி இருக்கு?"

"உங்களுக்கு பீஸ் எடுத்துட்டு வர மறந்துட்டேன்!"

—ஜலஜா, அய்யம்பேட்டை.



"ஜெயலட்சுமியை காதலித்தாயே, என்ன ஆச்சு?"

"இப்போ சி.பி.ஐ. விசாரணை நடக்கிறது!"

—வீ. பத்மா, மதுரை.




"இந்தக் கழுதைக்கு எத்தனை புத்தி சொன்னாலும் ஏறமாட்டேங்குது! என்னான்னு பாருங்க!"

—தமிழ்நாயகி.

ஒரு மரத்துக்குக் கீழே போலீஸ் வேன் தெரிய, பக்கத்தில் காக்கி சீருடைகள்.

கோகுல்நாத்தும், விஷ்ணுவும் கட்டிட முகப்பில் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ஆள், சோதனைகூடத்தில் ஒளிஞ்சுட்டிருக்கலாம்ன்னு சொல்றீங்களா?"

"ஆமா. சோதனைக்கூடம் பெரிசு. நிறைய மர பீரோ, அலமாரி இருக்கு. ரெண்டு அறை நிறையத் தட்டுமுட்டு சாமான்கள் வேறு குவிஞ்சு கிடக்கு. அதுக்குள்ளே போய் ஆள் ஒளிஞ்சுக்கிட்டான்னா கண்டுபிடிக்கிறது கஷ்டம். அவனைப் பிடிக்க உள்ளே போறது பெரிசில்லை. எல்லா அலமாரிகளிலும் ஆசிட் பாட்டில்கள் இருக்கு. துளி அமிலம் உடம்பு மேலே பட்டாலும், உள்ளே எலும்பு வரைக்கும் பாயும்."

"போலீசாரை உள்ளே அனுப்ப வேண்டாம்ன்னு சொல்றீங்களா?" கல்லூரி முதல்வரைக் கேட்டான், விஷ்ணு.

"ஆமா. போலீஸ் போனா, உள்ளே ஒளிஞ்சுட்டிருக்கிற ரவிக்குக் கோபம் வரலாம். ஆசிட் பாட்டில்களை எடுத்து வீச ஆரம்பிச்சுட்டான்னா பெரிய விபரீதமாயிடும். எல்லாமே நெருப்புமாதிரி... கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க..."

கோகுல்நாத், விஷ்ணுவை ஏறிட்டார்.

"விஷ்ணு... மைக்செட்டுக்கு ஏற்பாடு பண்ணு. அந்த ஜன்னலுக்குப் பக்கத்துல ஒலிபெருக்கியைக் கட்டி, கட்டிடத்துக்குள்ளே குரல் கேட்கும்படியா அறிவிப்பு கொடுக்கலாம்.

விஷ்ணு தலையசைத்துவிட்டு நகர்ந்தான்.

பதினைந்தே நிமிடம்.

கட்டிடத்தின் உட்பகுதியை நோக்கி, ஜன்னல் கம்பியில் ஒலிபெருக்கி கட்டப்பட்டது.

கோகுல்நாத் மைக்கில் பேசினார்.

"ரவி! நீ நினைத்துக்கொண்டிருப்பதுபோல் உனக்கு எயிட்ஸ் நோய் இல்லை. நீ ஆரோக்கியமாய் இருக்கிறாய். உனக்கு எயிட்ஸ் நோய் இருப்பதாகத் தப்பான தகவல் கொடுத்த ஆய்வக ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார். நீ செய்த கொலைக்குற்றங்கள் மன்னிக்கப்படும். வெளியே வா! உன்னை யாரும் எதுவும் செய்யமாட்டார்கள்."

கோகுல்நாத்தின் குரல் அந்தக் கட்டிட வளாகம் பூராவும் எதிரொலித்தது.

'ரவி வெளியே வருவானா?'

கும்பல் காத்திருந்தது.

## 8

**க**ல்லூரி கட்டிடத்தைச் சுற்றிலும் பரவியிருந்த கும்பலில் ஒரு அசாத்திய மவுனம் உறைந்து போயிருக்க, கோகுல்நாத் மறுபடியும் மைக்கில் குரலை உயர்த்திப் பேசினார்.

"ரவி! வெளியே வா... உன்னை யாரும் எதுவும் செய்யமாட்டார்கள். நீ நினைப்பதுபோல் உனக்கு எயிட்ஸ் இல்லை. நீ ஆரோக்கியமாக இருக்கிறாய். நீ செய்த கொலைக் குற்றங்கள் மன்னிக்கப்படும்."

பேசிவிட்டு இரண்டு நிமிடம் காத்திருந்தார், கோகுல்நாத். ரவி வெளியே வரவில்லை.

பக்கத்தில் நின்றிருந்த விஷ்ணு, மைக்கை வாங்கி குல்நாத் பேசியதையே இரண்டு தடவை பேசினான்.



உள்ளேயிருந்து சின்ன சத்தம்கூட வரவில்லை.

"அங்கிள்! இனிமேலும் இப்படிப் பேசிட்டிருக்கிறதுல எந்தவித பிரயோசனமும் இல்லை. உள்ளே புகுந்து பார்த்துட வேண்டியதுதான். மூளை பிசகி, கொலை வெறியோடு இருக்கிற ரவியின் காதுகளில் நாம் சொல்வது எதுவுமே கேட்காது."

"சரி... ஒரு காரியம் பண்ணலாம்."

"என்ன?"

"ஆயுத போலீசார் ரெண்டு பேரைக் கூட்டிட்டு கட்டிடத்துக்குள்ளே போவோம். ரவி கைகளில் ஏதாவது ஆயுதம் இருக்கலாம். அப்படி இல்லாத பட்சத்தில் ஆசிட் பாட்டில்களை எடுக்கலாம். ரவியைப் பிடிக்க அவன் முழங்காலுக்குக் கீழே சுடவேண்டி வந்தால் இனித் தயங்கக்கூடாது."

துப்பாக்கி ஏந்திய இரண்டு போலீசார் வரவழைக்கப்பட்டனர். கோகுல்நாத்தும், விஷ்ணுவும் அந்தக் கட்டிடத்தின் முகப்புக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே போனார்கள். துப்பாக்கி ஏந்திய போலீசார் பின்தொடர்ந்தார்கள்.

மிகப்பெரிய ஆய்வகம். ராட்சத கண்ணாடி பீரோக்களில் விதவிதமான வண்ணங்களில் அமில பாட்டில்கள். நிறநிறமாய் ஜாடிகள். நீளமான மரமேசைகளின் மேல் இரசாயனப் பரிசோதனைகளுக்குத் தேவைப்படும் உபகரணங்கள் அடைசலாய்த் தெரிந்தன.

பார்வைகளைச் சுழற்றிக்கொண்டே நடந்தார்கள்.

"அங்கிள்! இந்த பீரோக்களுக்கு பின்னாடி ரவி ஒளிஞ்சுட்டு இருக்க முடியாது. காரணம், சுவருக்கும் பீரோவுக்கும் மத்தியில் இருக்கிற இடைவெளி ரொம்பவும் குறுகலா இருக்கு."

"ஆனா... மேசைகளுக்குக் கீழே இருக்கிற இடைவெளி

களில் அவன் பதுங்கியிருக்க முடியும்.”

கோகுல்நாத் துப்பாக்கி ஏந்திய போலீசாரிடம் திரும்பினார். “அவசியம் ஏற்பட்டால் முழங்காலுக்குக் கீழே சுடுங்கள். ரவியை உயிரோடு பிடிப்பது முக்கியம்...”

தலையசைத்த அவர்கள் துப்பாக்கிகளை உஷார் நிலையில் வைத்துக்கொண்டு கோகுல்நாத்துக்கு இணையாக நடந்த விநாடி—

விஷ்ணு சட்டென்று நின்றான்.

பார்வையில் சின்னதாய் ஒரு கலவரம்.

“என்ன விஷ்ணு... ஏன் நின்னுட்டே?”

“கீழே பாருங்க அங்கிள்.”

கோகுல்நாத் பார்த்தார்.

சிமெண்டு தரைபரப்பில் சின்னதும் பெரியதுமாய்ச் சில சிவப்புத் துளிகள்.

“என்ன இது...?”

விஷ்ணுவும், கோகுல்நாத்தும் குத்துக்காலிட்டு உட்கார்ந்து இடக்கையின் ஆட்காட்டி விரலால் ஒரு சிவப்புத் துளியைத் தொட்டுப் பார்த்தார்கள்.

பிசுபிசுத்தது.

“விஷ்ணு! இது இரத்தம்...!”

“ஆமா அங்கிள்.”

பார்வைகளை துரத்திப் பார்த்தார்கள். அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து சில அடிகள் தள்ளி வரை தரையில் இரத்தத் துளிகள் தெரிந்தன.

அந்த இரத்தத் துளிகள் தள்ளித் தள்ளி விழுந்துகொண்டே போய், பக்கத்து அறைக்குப் போயிற்று.

எல்லோரும் நின்றார்கள்.



கோகுல்நாத், போலீசாரை ஏறிட்டு மெல்லிய குரலில் “உஷாரா இருங்க” என்றார்.

“ஆள் உள்ளே இருக்கலாம். துப்பாக்கியை உபயோகிப்பது கடைசி பட்சம். அவனைப் பிடிக்க முடியாதுங்கிற நிலை வரும்போது மட்டுமே முழங்காலுக்குக் கீழே சுடணும்.”

“எஸ்... சார்...”

விஷ்ணு, முதல் ஆளாய் அந்த அறையை நெருங்கினான். உடம்பையும் மனதையும் தயார் நிலையில் வைத்துக்கொண்டு மெல்லத் தலையை மட்டும் நீட்டி, எட்டிப்பார்த்தான்.

உள்ளே...

யாருமில்லை.

நிறையப் புத்தகங்கள் தெரிந்தன.

அலமாரிக்குக் கீழே இப்போது இரத்தம் குளம்கட்டித் தேங்கியிருந்தது. அந்த இரத்தம் மெலிதாய் ஒரு கோடு போட்டுக்கொண்டு அதன் பின்பக்கம் போயிற்று.

“அங்கிள்! அலமாரிக்கு பின்பக்கம் பிணம் கிடக்குதுன்னு நினைக்கிறேன்.”

“ஒரு வேளை... ரவி பின்னாடி இருந்தா?”

“சந்திக்க வேண்டியதுதான். வேறு வழியில்லை” விஷ்ணு சொல்லிக்கொண்டே பின்பக்கமாக மெதுவாகப் போய் எட்டிப் பார்த்தான்.

பார்வை சுளீரென்று மடங்கியது.

ஒரு வெள்ளை நிறப் பூனை, கழுத்து முழுதும் இரத்தமாய் பிசையப்பட்ட நிலையில் ஒருக்களித்து விழுந்திருந்தது.

**கோ**குல்நாத் இறந்து கிடந்த அந்தப் பூனையை பார்த்துக்கொண்டே, குரலில் லேசாய் நடுக்கம் தொற்ற கொள்ளச் சொன்னார்.

"யாரும் கைக்குக் கிடைக்காததால் ரவியோட கோபம் இந்த வாயில்லா ஜீவன் மேல் திரும்பி இருக்கு."

விஷ்ணு பரபரத்தான். "அங்கிள், பூனையோட இரத்தத்தைப் பார்க்கும்போது சம்பவம் இப்பத்தான் நடந்திருக்கும்ன்னு தோணுது. ரவி இன்னமும் இந்தக் கட்டிடத்துக்குள்தான் இருக்கணும். அவனை சேதமில்லாம பிடிக்கிற முயற்சியைக் கைவிட்டுட்டு, பார்த்த மாத்திரத்திலேயே முழங்காலுக்குக் கீழே சுட்டு, சாய்க்கணும்."

"நானும் இப்போ அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கேன், விஷ்ணு" சொன்ன கோகுல்நாத் பக்கத்தில் நின்றிருந்த காவலர்களை ஏறிட்டார்.

"ரவியைப் பார்த்ததுமே சுடுங்க... ஆனா, தோட்டா முழங்காலுக்குக் கீழே பாயணும்."

"எஸ் சார்."

அறையைவிட்டு வெளியே வந்தார்கள். உயர்த்திய துப்பாக்கிகளோடு காவலர்கள் நடக்க, கோகுல்நாத்தும் விஷ்ணுவும் பின்தொடர்ந்தார்கள்.

ஆய்வுக்கூடத்தின் பின்பக்கம் வந்தது.

ரவி தட்டுப்பட வில்லை.

விஷ்ணு பார்வையை வேகவேகமாய்ச் சுழற்றினான். "ரவி நிச்சயம் இந்தக் கட்டிடத்தைவிட்டு, வெளியே போயிருக்க முடியாது. எங்கேயோ பதுங்கியிருக்க வேண்டும்..."

'அந்த டிரம்முக்குள் இருப்பானா?'

'அந்தக் கதவுக்குப் பின்னால்...?'

விஷ்ணு பரபரவென்று யோசித்துக்கொண்டிருக்கும் போதே கோகுல்நாத் குரல் கொடுத்தார்.

"விஷ்ணு... இங்கே வா!"

விரைவாய்ப் போனான். கோகுல்நாத், ஜன்னலுக்குப்



பக்கத்தில் நின்றிருந்தவா...

"ரவி தப்பிச்சுட்டான். ஜன்னலைப் பார்த்து... பார்த்தான்.

கண்ணாடி ஜன்னல் உடைபட்டிருக்க, அந்தப் பழைய காலத்து கிரில் கம்பிகள் பெயர்க்கப்பட்டு ஓர் ஆள் உள்ளே நுழையும் அளவுக்கு இடைவெளி தெரிந்தது.

விஷ்ணு அந்த இடைவெளிக்குள் தலையை நுழைத்து வெளியே எட்டிப் பார்த்தான்.

குற்றுச்செடிகள் மண்டிய வெட்டவெளி தெரிந்தது. அதுக்கு அப்பால், வாகனங்கள் விரைந்துகொண்டிருந்த சாலை தெரிந்தது.

நேரம் நள்ளிரவைத் தாண்டி இருந்தாலும் தூக்கக் கலக்கம் சிறிதும் இல்லாமல் கமிஷனருக்கு முன்பாய் கோகுல்நாத்தும் விஷ்ணுவும் உட்கார்ந்திருந்தார்கள். கமிஷனர் ரோமம் கொட்டிய தன் முன் மண்டையை இடக்கை விரல்களால் தடவிக்கொண்டே கவலையான குரலில் பேசினார்.

"கொலைவெறி பிடிச்ச ஒரு மனநோயாளியை இன்னமும் விட்டு வெச்சிருக்கிறது சரியில்லை. அவனை உயிரோடு பிடிக்க முடியலைன்னா சுட்டுக் கொல்லுங்க. இதுல கருணை காட்ட என்ன இருக்கு? அவன் எயிட்ஸ் நோயாளி இல்லாம இருக்கலாம். ஆனால், கொலைவெறியன். பலகொலைகளைப் பண்ணின பின்னாடியும் கொலை வெறி தணியாதவன். அவனை உயிரோடு விட்டுவெச்சா, இன்னும் சில உயிர்களை நாம் இழக்க வேண்டியிருக்கும்."

"சார்..." கோகுல்நாத் குறுக்கிட்டார்.

"ம்... சொல்லுங்க."

"ரவி கொல்லப்படவேண்டியவன் இல்லை. அ...

பணத்துக்காகவோ, முன் விரோதம் காரணமாகவோ யாரையும் கொலை செய்யலை. அவன் மனசுக்குள்ளே உருவான ஒரு வெறிதான் இந்தக் கொலைகளுக்குக் காரணம். ரவி கொலைகாரனாய் மாறினதுக்குக் காரணம், ஆஸ்பத்திரி ஆய்வக ஊழியர்.

ரவி எம்.இ. படித்தவன். தங்கப் பதக்கம் பெற்றவன். ஒரு சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்துட்டிருக்க வேண்டியவன். தப்பான அறிக்கை அவன் தலைவிதியையே தலைகீழா மாத்திடுச்சு.

மூளை பிசகின நிலைமையில் யார் எந்தக் குற்றத்தைப் பண்ணினாலும் அந்தக் குற்றத்தை தண்டிக்கிற கோணத்தில் கோர்ட்டு பார்க்கிறதில்லை. அவனை மனநோய் நல விடுதிக்கு அனுப்பி, குணப்படுத்தி ஒரு புது வாழ்க்கையை ஆரம்பித்து கொடுக்கச் சொல்கிறது. ரவிக்கும் அப்படியொரு நல்ல வாழ்க்கையை உருவாக்கித் தரணும்ங்கிறதுதான் எங்க எண்ணம்."

கமிஷனர் புன்னகைத்தார்.

"உங்க எண்ணம் ஈடேறுவதுக்குள் இங்கே இருக்கிற டாக்டர்களில் பாதிபேர் பரலோகம் போயிடுவாங்க போலிருக்கே?"

"இருபத்திநாலு மணி நேரம் அவகாசம் கொடுங்க சார். அதுக்குள்ளே ரவியைக் கண்டுபிடிச்சிடுறோம்."

"கண்டுபிடிக்க முடியலைன்னா?" கமிஷனர் குரலை இழுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே, மேசையின் மீது இருந்த தொலைபேசி 'திடும்' என்று விழித்துக்கொண்டு கத்தியது.

கோகுல்நாத்தும், விஷ்ணுவும் பயத்தோடு அதைப் பார்த்தார்கள்.



# 9

தொலைபேசி அலறிக்கொண்டிருக்க, ரிசீவரை எடுத்து காதுக்கு ஒட்ட வைத்து, "அலோ..." என்றார், கமிஷனர்.

போலீஸ் கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஓர் அதிகாரி பேசினார். "சார்... முக்கியமான செய்தி."

"என்ன?"

"டாக்டர் கலாதரனைக் கொலை செய்வதற்காக ரவி அவருடைய பங்களாவுக்குப் போயிருக்கிறான். அதிருஷ்டவசமாய் டாக்டர் தப்பிவிட்டார். டாக்டரை தப்பிக்க வைத்தது அவருடைய வீட்டு நாய். அதனால் ஏற்பட்ட ஆத்திரத்தில் நாயின் தலையில் மண்தொட்டியை எடுத்துப் போட்டுக் கொன்னுருக்கிறான், ரவி."

"அவனைப் பிடிக்க முடியலையா?"

"டாக்டரின் வீட்டு வேலைக்காரர்கள் துரத்திக்கொண்டு போயிருக்கிறார்கள்."

"அங்கே போலீஸ் படை போய்விட்டதா?"

"அந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் அனுப்பிவிட்டோம். இந்நேரம் போய்ச் சேர்ந்திருப்பார்கள்."

"ரவி பிடிபட்டதும் எனக்குத் தகவல் கொடுங்க."

கமிஷனர், ரிசீவரை வைத்துவிட்டு எதிரில் உட்கார்ந்திருந்த கோகுல்நாத்தையும், விஷ்ணுவையும் ஏறிட்டார்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் மருத்துவர் கலாதரனை குறி வைத்திருக்கிறான், ரவி. அந்தக் குறியிலிருந்து அவர் தப்பிச்சதும் ஆத்திரத்துல நாயை கொன்னுருக்கான். அவனை இனியும் எப்படி விட்டு வைக்கிறது?"

"சார்... வந்து..."

"பேசாதீங்க...! நீங்க மொதல்ல டாக்டர் கலாதரன் வீட்டுக்குப் போய் விசாரணை பண்ணுங்க. மத்த டாக்டர்களை காப்பாத்துறதுக்கான வழிமுறைகளையும் யோசனை பண்ணிச் செயல்படுத்துங்க. நான் மேலதிகாரிகள்கிட்ட பேசி, அவனை சுட்டுக் கொல்ல உத்தரவு வாங்கிடுறேன்."

கமிஷனர் பெரிய சத்தத்தோடு நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

மருத்துவர் கலாதரன் இன்னமும் அதிர்ச்சியிலிருந்து மீளாமல் வெளுத்துப்போன முகத்தோடு உட்கார்ந்திருந்தார்.

பங்களாவுக்குப் பின்பக்கம் சம்பவம் நடந்ததற்கான அலங்கோலங்கள் தெரிந்தன. அந்த ஆளுயர அல்சேஷன் நாய் தலை நசுங்கி, இரத்தமாய் விறைத்துக் கிடந்தது. சுவர்களில் இரத்தப் புள்ளிகள். நான்கைந்து குரோட்டன்ஸ், சேதமடைந்து மண் தொட்டிகள் சில்லுச்சில்லாய் உடைந்து கிடந்தன.

கோகுல்நாத், விஷ்ணுவின் தோளைத் தொட்டார்.

"விஷ்ணு, நாயோட வாயில் ஏதோ மாட்டி இருக்கிற மாதிரி தெரியுது. அது என்னன்னு பாரு."

விஷ்ணு, நாய்க்குப் பக்கத்தில் மண்டியிட்டு அதன் கோரைப் பற்களில் மாட்டியிருந்ததை எடுத்து உற்றுப் பார்த்தான்.

பிய்ந்துபோன துணி. வால் வாலாய்ப் பிரிந்து தெரிந்தது. விஷ்ணு அதை எடுத்து கோகுல்நாத்திடம் நீட்ட, அவர் வாங்கிப் பார்த்துவிட்டு, மெல்லிய குரலில் சொன்னார். "அது, ரவியோட சட்டை துணி. நேத்து இராத்திரி கட்டிட சாரத்துல சிக்கியிருந்த அதே சட்டை, ஞாபகமிருக்கா விஷ்ணு?"

"ஆமா அங்கிள்...! இனி ரவியை வெளியே விட்டு வைக்கிறது சரியில்லை. நிமிடத்துக்கு நிமிடம் அவனோட



வெறி அதிகமாகிக்கிட்டே போகுது. இவ்வளவு பெரிய நாயைச் சமாளிச்சு கொன்னுருக்கான்னா... அவனோட உடம்பில் இப்ப ஒரு ராட்சதனோட பலம் இருக்கணும்..."

"நிலைமை விபரீதமாகத்தான் போயிட்டிருக்கு. எந்த நேரத்துல யாரைப்போய் எப்படித் தாக்குவான்னே தெரியலை. அவனைப் பிடிக்க ஏதாவது ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடிச்சே ஆகணும்..." சொல்லிக்கொண்டே, மருத்துவர் கலாதரனை நெருங்கிய கோகுல்நாத் அவருக்கு முன்பாய் இருந்த காலியான கூடை நாற்காலிக்கு தன் உடம்பைக் கொடுத்தார்.

நெற்றிப் பொட்டை இரண்டு கைகளாலும் பற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்த கலாதரன் தலை நிமிர்ந்தார். அவர் குரல், பயத்தில் கட்டிப்போயிருந்தது.

"இன்ஸ்பெக்டர்! ரவி இப்போது மனிதனே இல்லை. ஒரு வெறிபிடிச்ச மிருகம். என்னை அவன் பார்த்தப் பார்வை இருக்கே... அது இரத்த வெறி பிடிச்ச ஒரு புலியோட பார்வை மாதிரி இருந்தது."

"கையில ஏதாவது ஆயுதம் வெச்சிருந்தானா...?"

"இல்லை..."

"எப்படி உள்ளே வந்தான்...?"

"அதுதான் புரியலை. பங்களா காவலாளி உஷாராக இருந்திருக்கிறான். நாய் சார்லியும் பங்களாவைச் சுத்திச் சுத்தி வந்திருக்கு. காவலாளியையும், நாயையும் ஏமாத்திட்டு பங்களாவோட பின்பக்க வழியாக ரவி உள்ளே நுழைஞ்சிருக்கான்."

"ரவியை எப்படிப் பார்த்தீங்க...?"

"யாரோ படுக்கை அறைப் பன்பக்கக் கதவை பிறாண்டுகிற சத்தம் கேட்டது. சார்லி சில நேரம் படுக்கும்போது... பின்பக்கமா வந்து கதவை பிறாண்டுறது உண்டு. தூக்கக்

கலக்கத்துல அது சார்லியாகத்தான் இருக்கும் என்கிற நினைப்போடு போய்க் கதவைத் திறந்தேன்.

வெளியே ரவி நின்னுட்டிருந்தான். கலைஞ்ச தலை, வேர்வை முகம், ரெண்டு இரத்தக் குளங்களாய் கண்கள். என்னையே வெறிக்கப் பார்த்தான். நான் கத்த வாயெடுத்தேன். என் மேல பாய்ஞ்சான். நான் சட்டுன்னு விலகி, பக்கத்தில் இருந்த குளியறைக்குள்ளே கண் இமைக்கிற நேரத்துக்குள்ளே நுழைஞ்சு தாழ்ப்பாள் போட்டுக்கிட்டேன்.

ரவி, கதவை தோளாலே மோதி திறக்கப் பார்த்தான். சத்தம் கேட்டு சார்லி வந்து குரைக்க ஆரம்பிக்கவும் அவனோட ஆத்திரம் சார்லி மேல திரும்பிடுச்சு. குரோட்டன்ஸ் தொட்டிகளை எடுத்து... சார்லி தலைமேல போட்டுட்டு ஓடிட்டான். நாய் குரைச்ச சத்தத்தைக் கேட்டுட்டு... பங்களாவுக்கு முன்பக்கமாய் இருந்த வாட்ச்மேனும் வேலைக்காரங்களும் ஓடிவந்தாங்க... பின்பக்கமா சுவர் ஏறிக்குதிச்சு தப்பிச்சுப்போன ரவியை துரத்திட்டுப் போனாங்க. அவன் கிடைக்கலை..."

"உங்களுக்கு ஏதும் காயம் ஏற்படலையே...?"

"இல்லை... பக்கத்துல குளியலறை இருந்ததால்தான் என்னால தப்பிக்க முடிஞ்சது."

"இந்த வீட்டுல நீங்க மட்டும்தானா? வேறு யாரும் இல்லையா...?"

"என் மனைவி அகல்யா தன் சகோதரியின் சீமந்த விழாவுக்காக ராஜபாளையம் போயிருக்கா... என் ஒரே பையன், ஊட்டியில் தங்கிப் படிக்கிறான்."

"டாக்டர்! நீங்க ரவியைப் பார்த்ததுமே ஒரு காரியம் பண்ணி இருக்கலாம்."

"என்ன...?"

"உங்களைத் தாக்குறதுக்காக உள்ளே பாய்ந்த



போதே சமயோசிதமா நீங்க வெளியேறி கதவை வெளிப் பக்கமாகத் தாழ் போட்டிருக்கலாம்."

"எனக்கு அந்த எண்ணம் தோணலை. ரவியைப் பார்த்ததுமே சில விநாடிக்கு என் உடம்புல இருந்த இரத்தமெல்லாம் உறைஞ்சு போன மாதிரி உணர்வு. இவன் கையால சாகப் போகிறோமே என்கிற பயம்தான், என் மனசுக்குள்ளே இருந்தது. மரண பயம்..." கலாதரன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே படுக்கை அறையின் மூலையில் இருந்த தொலைபேசி குரல் கொடுத்தது.

**தீவுகள் அழிந்தன!**

ஆழிப் பேரலையால் (சுனாமி) மாலத்தீவு நாட்டில் மூன்றில் 2 பங்கு, கடல் தண்ணீரில் அடியோடு மூழ்கியது. இதனால் அங்கு ஏராளமான குட்டித்தீவுகள் அழிந்துவிட்டன.

கோகுல்நாத் போய் ரிசீவரை எடுத்தார்.

"அலோ."

"மறுமுனையில் கமிஷனர் பேசினார்.

"மிஸ்டர் கோகுல்நாத்?"

"எஸ்... சார்..."

"ரவியைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சதா?"

"இல்லை சார்."

"உயர் அதிகாரிகள்கிட்டே பேசிட்டேன். அவனை சுட உத்தரவு வந்தாச்சு. சிறப்பு கமாண்டோ போலீஸ் படை ரோந்து போயிருக்கு... இனி ரவி தப்ப முடியாது. விடியுறதுக்குள்ளே அவனோட பிணம், ஆஸ்பத்திரியில் இருக்கும்."

கமிஷனர் சொல்லிக்கொண்டே போக... கோகுல்நாத் மனசுக்குள் மெதுவாக ஒரு கனம் பரவியது.

விடிவதற்காக கிழக்குத் திசை காத்துக்கொண்டிருந்தது. இன்னும் வெளியே எட்டிப் பார்க்காத சூரியன் மேகங்களின் ஓரங்களுக்கு சிவப்பு நிறத்தைத் தடவி இருந்தான்.

பெசன்ட் நகர் விழித்துக்கொண்டதற்கு அடையாளமாய் பால் பூத்களில் கூட்டம் தெரிந்தது. பேசிக்கொண்டே தொந்தியைக் கரைக்கும் முயற்சியில் சில வி.ஐ.பி.கள், சுனாமி புரட்டிய கடற்கரை மணலில் நடை போட்டனர். அஷ்டலட்சுமி கோவில் ஒலி பெருக்கி, பக்தி பாடலை ஒலித்துக்கொண்டிருந்தது.

பெசன்ட் நகரின் ஏழாவது குறுக்குத் தெரு கோடியில் இருந்த பங்களா மாடியறை ஒன்றில் மணி 5.45-க்கு அலாரம் அலறியது.

போர்வைக்குள் இருந்த அழகுசுந்தரம் எழுந்து உட்கார்ந்து கடிகாரத்தின் தலையில் கையை வைத்து... அதன் வாயைச் சாத்திவிட்டு படுக்கையிலிருந்து கீழே இறங்கினார்.

ஜன்னல் வழியே கடல்காற்று குபுகுபுத்தது. மெல்ல நடந்து ஜன்னல் பக்கமாய் வந்து எட்டிப் பார்த்தார். கடல், வைகறை இருட்டில் ஒரு சாம்பல்நிறப் போர்வை மாதிரி அசைந்தது.

‘ஆகா! சற்று சுத்தமான காற்றைச் சுவாசித்துக்கொண்டே காலம் பூராவும் சாப்பிடாம இருந்துடலாம் போலிருக்கே!’

“என்னங்க... எந்திரிச்சுட்டீங்களா...?”

பின்னால்... காப்பியோடு வந்த மனைவியின் குரல். திரும்பி மனைவி ஜெயலட்சுமியைப் பார்த்துச் சிரித்தார். “இந்த பகுதியில் வீடு கட்ட வேண்டாம்னு சொன்னியே... இந்த ரம்மியமான காட்சி எந்த இடத்துல கிடைக்கும்?”

“வாழ்க்கைக்கு அது ஒண்ணு மட்டும் போதுமாக்கும்? எந்த நேரத்துல கடல் கொந்தளிக்கும்னு தெரியலை. ஊரில், தெருக்குழாயில தண்ணி வர்றதில்லை, ஒரு நாளைக்கு மூணு மணி நேரம் மின்சாரம் இல்லை, ரேஷன் கடைக்கு நாலு தெரு





தள்ளிப் போகணும், சாக்கடை கால்வாய் கிடையாது. எல்லாத்துக்கும் மேலாக கொசுத்தொல்லை. அப்புறம்... அப்புறம்..."

குரல் சட்டென்று நின்றது.

அழகுசுந்தரம் புன்னகைத்தார். "ஏன்... நிறுத்திட்டே அடுக்கிட்டு போ."

"எ... என்னங்க..."

அவளுடைய குரல் குழறுவதைப் பார்த்து முகம் மாறி அவளை ஏறிட்டார். பார்வை பக்கத்து நிலத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த வீட்டு மாடியில் நிலைத்திருந்தது.

"என்ன ஜெயலட்சுமி...! எதை பார்த்துட்டு அப்படி இருக்கே?"

"எ... என்னங்க... கட்டிட்டிருக்கிற அந்த வீட்டு மாடியில் இருக்கிற திருஷ்டி பொம்மையைப் பார்த்தீங்களா?"

"ஏன்... அதுக்கென்ன...?"

"கொஞ்சம் உத்துப் பாருங்க."

பார்த்தார்.

ஒரு பழைய கோட்டு, பேண்டில் ஐந்தடி உயரத்தில் இருந்த அந்த பொம்மை கடல் காற்றில் லேசாய் ஆடியது.

"என்ன ஜெயலட்சுமி... டாக்டர் ஒருத்தர் கட்டிட்டு இருக்கிற அந்த வீட்டு திருஷ்டி பொம்மையை ரெண்டு மாசமா பார்த்துட்டுதானே இருக்கோம். இன்னிக்கு என்ன... அது புதுசா இருக்கு?"

"திருஷ்டி பொம்மையோட மூஞ்சியைப் பாருங்க."

பார்த்தார்.

சாயம் போய்க்கொண்டிருந்த அந்தக் காலை நேர இருட்டிலும்... தெளிவாய்த் தெரிந்தது.

உண்மையாகவே ஒரு மனித முகம்.

அதில், நிலைத்தன கண்கள்!



# 10

**கோ**குல்நாத், காலை நேர 'நடை' போவதற்காக கால்களுக்கு கான்வாஸ் போட்டுக்கொண்டிருந்தபோது— குறுமேசை மேல் உட்கார்ந்திருந்த தொலைபேசி வாயைத் திறந்தது.

போய் ரிசீவரை எடுத்தார்.

ஒரு குரல் கேட்டது.

"கோகுல்நாத் சாரா...?"

"ஆமா..."

"நான்தான் பேசுறேன்."

"வணக்கம் சார். போலீஸ் கட்டுப்பாட்டு அறை. உங்களுக்கொரு செய்தி. பெசன்ட் நகரிலுள்ள வீட்டிலிருந்து..."

"சொல்லுங்க."

"பெசன்ட் நகர் ஏழாவது குறுக்குத் தெருவில் டாக்டர் ஒருத்தர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். உடலை கட்டிட திருஷ்டி பொம்மைக்குள்ளே வெச்சுக் கட்டி, தொங்க விட்டிருக்கு. இன்ஸ்பெக்டர் போயிருக்கார். ரவியோட கொலைவெறிக்கு மேலும் ஒரு டாக்டர் பலியாகி இருக்கிற அந்த விசயத்தை உங்களுக்கும் மிஸ்டர் விஷ்ணுவுக்கும் சொல்லச் சொல்லி எங்களுக்கு உத்தரவு வந்தது..."

கோகுல்நாத் ஆயாசமாய்ப் பெருமூச்சுவிட்டார்.

"கொலையான டாக்டர் யாரு?"

"டாக்டரோட பேர் சம்பந்தம், சார். ரொம்ப பிரபலம் ஆனவர். வேப்பேரியில் அவருக்கு ஆஸ்பத்திரி இருக்கு."

"நான் இப்பவே அங்கே கிளம்புறேன். சரியான

முகவரி என்ன?"

"பெசன்ட் நகர் ஏழாவது குறுக்குத் தெரு. வீட்டு எண் தெரியலை சார். கட்டுமானம் நடக்கிற வீடு..."

"தகவல் கொடுத்தது யாரு?"

"பக்கத்து வீட்டில் இருக்கிற ஒருத்தர். அவர் பேர் அழகுசுந்தரம்."

"விஷ்ணுவுக்கு சொல்லியாச்சா?"

"இல்லை சார். அவர் கிடைக்கலை. பத்து நிமிடத்துக்கு முந்திதான் ஜாக்கிங் கிளம்பினாராம். திரும்ப எப்படியும் ஒரு மணி நேரமாயிடும்ன்னு வீட்டில் சொன்னாங்க."

"சரி, நான் பெசன்ட் நகர் போயிட்டிருக்கேன். விஷ்ணுவுக்கு மறுபடியும் போன் பண்ணி சொல்லி, அங்கே வரச் சொல்லுங்க."

"எஸ் சார்..."

**கோ**குல்நாத் போய்ச் சேர்ந்தபோது— சூரியன் தலைநீட்டி வங்கக் கடல் பூராவும் குங்குமம் தூவிக் கொண்டிருந்தான். வைகறை இருட்டு சுற்றிலும் சூழப் பட்டிருக்க, மரங்கள் பசேலென்று தெரிந்தன.

பெசன்ட் நகர் ஏழாவது குறுக்குத் தெரு சற்றே பதற்றமாய் இருந்தது. வீட்டு வாசல்களிலும், மொட்டை மாடிக்ளிலும் பீதி நிறைந்த முகங்கள் தெரிந்தன.

கோகுல்நாத் தன் வாகனத்தை நிறுத்திக்கொண்டிருக்கும் போதே— பெசன்ட் நகர் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் வேகவேகமாய் எதிர்பட்டு 'சல்யூட்' வைத்தார். கோகுல்நாத் கேட்டார்.

"பிரேதத்தை கீழே இறக்கிட்டீங்களா?"

"இறக்கியாச்சு சார்..."

"ஒரு டாக்டரை கூப்பிட்டு இங்கேயே பிரேத பரிசோதனை



பண்ணிடலாமே!"

"டாக்டர் உடனே கிடைக்கலை. இப்பத்தான் வந்தார். பிரேத பரிசோதனை நடந்துகிட்டு இருக்கு சார்."

கும்பல் வழிவிட உள்ளே போனார்கள். கருங்கல் ஜல்லி, செங்கல் என்று கட்டிடத்துக்கு தேவையான சாமான்கள் அம்பாரமாய்க் குவித்து வைக்கப்பட்டிருக்க— கிடைத்த இடைவெளிகளில் புகுந்து உள்ளே நுழைந்தார்கள்.

மருத்துவர் சம்பந்தம் உறைந்து போன இரத்தத்தோடு மல்லாந்திருக்க— அவருக்குப் பக்கத்தில் மருத்துவர் ஒருவர் தெரிந்தார்.

பரிசோதனை முடியும் வரை மவுனமாய்க் காத்திருந்த கோகுல்நாத், பின் கேட்டார்.

"மரணம் எப்படி டாக்டர்?"

"ஒரு செங்கலை எடுத்து சம்பந்தத்தோட பின்னந்தலையை மூர்க்கமா அடிச்சதால் உடனே மரணம்..."

"சம்பவம் எத்தனை மணியிலிருந்து எத்தனை மணிக்குள் நடந்திருக்கணும்ன்னு நீங்க நினைக்கிறீங்க, டாக்டர்?"

"இரத்தத்தை வச்சி பார்க்கும்போது சம்பவம் விடிகாலை நாலு மணியிலிருந்து அஞ்சு மணிக்குள் நடந்திருக்கலாம்."

"கட்டிட வேலை நடக்கிற வீட்டுக்கு விடிகாலை நாலு மணிக்கு சம்பந்தம் எதுக்காக வந்தார்?" கோகுல்நாத் இந்தக் கேள்வியைக் கேட்டுக்கொண்டே இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனைப் பார்த்தார்.

"தெரியலை சார்."

"மொதல்ல பிணத்தைப் பார்த்தது யாரு?"

"பக்கத்து வீட்டு அழகுசுந்தரம்."

"அவரை வரச் சொல்லுங்க."

அடுத்த நிமிடம் அழகுசுந்தரம், நெற்றியில் மின்னும்

வியர்வையோடு வந்தார். கோகுல்நாத் கேட்டார்.

"உங்களுக்கு என்ன தொழில்...?"

"இங்கே பாரீசில் பெயிண்ட் கடை வெச்சிருக்கேன். கடை பேரு அழகு பெயிண்ட்ஸ்."

"பிணம் உங்க பார்வைக்கு எப்படிக் கிடைச்சது?"

"மொதல்ல பிணத்தைப் பார்த்தது நான் இல்லை. என் மனைவிதான். அவ சொன்ன பின்னாடிதான் நானே கவனிச்சேன்."

"டாக்டர் சம்பந்தம் உங்களுக்கு நல்ல பழக்கமா?"

"இல்லை. அவர் யார் கூடவும் பேசமாட்டார். கட்டிடம் கட்ட ஆரம்பிச்ச இந்த ஆறு மாசத்துல என்கிட்ட ரெண்டே ரெண்டு தடவைதான் பேசியிருக்கார். அதுவும் சாதாரணமாகத்தான்."

கோகுல்நாத் சில விநாடி கழித்து மெல்லிய குரலில் கேட்டார்.

"இவ்வளவு கொடூரமா கொலை நடந்திருக்கு. உங்களுக்கு எந்தச் சத்தமும் கேட்கலையா?"

"இல்லையே."

"நீங்க எத்தனை மணிக்கு எந்திரிச்சீங்க?"

"அஞ்சே முக்கால்."

"காலையில நாலு மணியிலிருந்து அஞ்சு மணிக்குள் சம்பந்தம் கொல்லப்பட்டிருக்கார். அந்த நேரத்தில் கட்டிடத்துக்குள் அவருக்கு என்ன வேலை? இது மாதிரியான காலை வேளைகளில் டாக்டர் எப்பவாவது வந்திருக்காரா?"

"நான் பார்த்ததில்லை."

"டாக்டருக்கு குடும்பம் இருக்கா?"

"அவரோட மனைவியும், மகளும் கனடாவில் இருக்கிறதா



கேள்விப்பட்டேன். மற்றபடி அவரோட குடும்பம் பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது."

"உங்க வீட்டுல போன் இருக்கா?"

"இருக்கு."

"ஒரு போன் பண்ணணும்."

"வாங்க..."

அழகுசுந்தரம், தன் வீட்டுக்கு கூட்டிப்போனார். அவரின் மனைவி முகத்தில் இன்னமும் திகில் அகலாமல் உட்கார்ந்திருந்தது.

கோகுல்நாத், முன் அறையில் இருந்த தொலைபேசியைத் தொட்டு ரிசீவரை எடுத்துக்கொண்டு— விஷ்ணுவைத் தொடர்புகொள்ள எண்ணைத் தட்டினார்.

"அலோ..."

எதிர்முறையில், விஷ்ணுவின் மனைவி ஆர்த்தி.

"யாரு?"

"என்னம்மா ஆர்த்தி, விஷ்ணு 'வாக்கிங்' போயிட்டு வந்தாச்சா?"

"அங்கிள் நீங்களா...? இப்ப எங்கே இருந்து பேசிட்டு இருக்கீங்க?"

"பெசன்ட் நகரில் ஒரு வீட்டிலிருந்து! இங்கே ஒரு கொலை. போலீஸ் கட்டுப்பாட்டு அறையிலிருந்து போன் பண்ணி உனக்கு சொல்லி இருப்பாங்களே...?"

"சொன்னாங்க அங்கிள்."

"விஷ்ணு வந்தா உடனே இங்கே அனுப்பி வைம்மா...! இந்த ரவி வழக்கு முடிகிற வரைக்கும் விஷ்ணுவை 'வாக்கிங்' எல்லாம் போக வேண்டாம்ன்னு சொல்லும்மா... எந்த நேரத்துல எது நடக்கும்ன்னு யூகம் பண்ணவே முடியலை."

"அங்கிள்..." குரலைத் தாழ்த்திக்கொண்டாள். "இப்ப உங்க

பக்கத்துல வேறு எந்த போலீஸ் அதிகாரியும் இல்லையே?"

"இல்லை. ஏம்மா..."

"நீங்க போன் பண்ணினா உங்ககிட்ட மட்டும் ஒரு தகவலை சொல்லணும்ன்னு அவர் சொல்லிட்டுப் போயிருக்கார்."

"யார், விஷ்ணுவா?"

"ஆமா. அங்கிள் அவர் வாக்கிங் போகலை."

"பின்னே?"

"கும்மிடிப்பூண்டி போயிருக்கார்..."

"கும்மிடிப்பூண்டிக்கா... எதுக்கு?"

"தெரியலை. விடிகாலை நாலு மணி சுமாருக்கு அவருக்கு ஒரு போன் வந்தது. பேசினதும் 'டென்ஷன்' ஆயிட்டார். உடனே புறப்பட்டுப் போனார். போறதுக்கு முந்தி ஒரு துண்டு காகிதத்தில் ஏதோ முகவரி எழுதிக் கொடுத்து, நீங்க போன் பண்ணினா உங்ககிட்ட மட்டும் அந்த முகவரியைச் சொல்லச் சொன்னார். வேறு யாருக்கும் எந்தத் தகவலும் கொடுக்காமல் உங்களை மட்டும் அந்த இடத்துக்கு புறப்பட்டு வரும்படி சொன்னார்."

கோகுல்நாத் பதற்றமானார்.

"அட்ரசை படிம்மா..."

"நம்பர் 32, பார்கவி இல்லம், துர்க்கா பரமேஸ்வரி கோயில் சாலை, கும்மிடிப்பூண்டி..."

"விஷ்ணு வேறு ஒண்ணும் சொல்லலையா?"

"இல்லை அங்கிள்."

"விஷ்ணுகிட்டே போனில் பேசினது யாரு?"

"யாருன்னு தெரியலை. ஆனா, ஒரு பெண்."

"பெண்ணா?"

"ம்...! அங்கிள்! எனக்கு பயமா இருக்கு. ஒரு போனை



அவர் போயிருக்கார். நீங்க உடனே அந்த இடத்துக்குப் போங்க அங்கிள்!"

ஆர்த்தியின் குரலில் ஓர் அவசர அலாரம் அடித்தது.

## 11

கோகுல்நாத் அந்தக் காலை வேளையில் ஜீப்பை விரட்டிக்கொண்டு கும்மிடிப்பூண்டி எல்லையைத் தொட்ட போது காலை ஏழரை மணி. ஒரு பேக்கரிக்கு முன்பாய் ஜீப்பை நிறுத்தினார். பிஸ்கட் ஜாடிகளை துணியால் தேய்த்து சுத்தம் செய்துகொண்டிருந்த அந்த ஆளிடம் கேட்டார்!

"துர்கா பரமேஸ்வரி கோயில் ரோடு எங்கே இருக்கு?"

"அவர் வெளியே ஓடிவந்து— நான்கடி தள்ளி எட்டி நின்று பவ்வியமாய்ச் சொன்னார்.

"நேரா போனா தண்ணி டேங்க் வரும், சார். அந்த ரோட்டிலேயே போய் இடப்பக்கம் திரும்பினா நீங்க சொல்ற கோயில்ரோடு வரும்..."

ஜீப்பை நகர்த்தினார், கோகுல்நாத். நிமிட நேரத்துக்குள் நேரே போய் திரும்பினார்.

துர்கா பரமேஸ்வரி கோயில் தெரு பெயர்ப் பலகை சாலையோரமாய்ச் சாய்ந்து தரிசனம் கொடுத்தது.

அது குறுகலான சாலை: இருபுறங்களிலும் வீடுகள் நெருக்கியடித்துக்கொண்டு இருந்தன. வாசல்களில் அன்றைய காலை நேரக் கோலங்கள் விதவிதமாய் ஜனனம் எடுத்திருந்தன.

அந்த வீட்டை தேடினார், கோகுல்நாத். ஒரு வீட்டின் எண் 175 என்று தெரிய, அதற்குப் பக்கத்து வீட்டு எண்ணைப்

பார்த்தார். அது 174.

எண்கள் பின்நோக்கிப் போகின்றன.

ஜீப்பை சீரான வேகத்தில் விரட்டினார், கோகுல்நாத்.

போகப் போக வீடுகளின் அடர்த்தி குறைந்தது. தள்ளி, தள்ளி, தனியாய் பங்களா வீடுகள்.

கோகுல்நாத்தை ஆச்சரியம் ஆக்கிரமித்தது.

'விஷ்ணுவுக்கு இந்த கும்மிடிப்பூண்டியில் என்ன வேலை?'

'இங்கே யாரைப் பார்க்க வந்திருக்கிறான்...?'

'அதுவும் இரகசியமாய்...!'

'போனில் விஷ்ணுவோடு ஒரு பெண் பேசியதாய் ஆர்த்தி சொன்னாள். அந்தப் பெண் யார்...?'

வீட்டு எண் 34 பார்வைக்குக் கிடைக்க, ஜீப்பின் வேகத்தை குறைத்தார். 33 எண்ணைத் தாண்டியதும் 32 வந்தது. அது அழகிய பங்களாவாகக் காட்சியளித்தது. வீட்டைச் சுற்றிலும் சுவர் கட்டியிருக்க— போகன்வில்லா செடிகள் குங்கும நிறப் பூக்களாகத் தெரிந்தன. 'கேட்' திறந்திருக்க, அதன் ஒரு பக்க தூணில் பதித்திருந்த மார்பிள் செவ்வகம் 'பார்கவி இல்லம்' என்று தமிழிலும், ஆங்கிலத்திலும் சொல்லியது.

கோகுல்நாத் ஜீப்பை உள்ளே நுழைத்து— போர்ட்டிகோவில் ஏற்கெனவே நிறுத்தியிருந்த ஒரு காருக்கு பின்னால் கொண்டுபோய் நிறுத்தினார். போர்டிகோவின் பக்கவாட்டில் விஷ்ணுவின் வாகனம் தெரிந்தது. அதன் உடம்பு முழுக்கப் புழுதி மயம்.

கோகுல்நாத், ஜீப்பைவிட்டு இறங்கிக்கொண்டிருக்கும் போதே— விஷ்ணு எதிர்ப்பட்டான்.

"வாங்க அங்கிள்..."

"என்ன விஷ்ணு... காலங்கார்த்தால கும்மிடிப்பூண்டிக்கு விஜயம் பண்ண வெச்சுட்டே...?"



"உள்ளே வாங்க அங்கிள் பேசலாம்..."

"இது யாரோட வீடு...?"

"டாக்டர் பார்கவி வீடு. பார்கவியும் நானும் பி.எஸ்சி. முதலாண்டு ஒண்ணா படிச்சோம். அடுத்த வருடமே எம்.பி.பி.எஸ். கிடைக்க, பி.எஸ்சி. படிப்பை பாதியில் விட்டுட்டுப் போயிட்டாங்க. இன்னிக்கு கும்மிடிப்பூண்டியில் பிரபல டாக்டர்..."

உள்ளே நுழைந்தார்கள்.

பக்கவாட்டு அறையிலிருந்து அந்தப் பெண் வெளிப்பட்டாள். முகத்தில் மருத்துவர் களை தெரிந்தது.

"அங்கிள்... இவங்க மிஸ் பார்கவி..."

"அலோ..."

"பிளீஸ், உட்காருங்க...."

சோபாவில் உட்கார்ந்தார்கள். கோகுல்நாத் கேட்டார்:

"விஷ்ணு! இங்கே எதுக்காக என்னைக் கூப்பிட்டு இருக்கேன்னு தெரிஞ்சுக்கலாமா...?"

"நிச்சயமா அங்கிள்... அதுக்காகத்தானே உங்களை இங்கே வரச்சொல்லி இருக்கேன்..."

"சரி சொல்லு..."

"நீங்க இங்கே வந்தது வெளியே யாருக்கும் தெரியாதே!"

"தெரியாது..."

"அங்கிள்...! ரவியை வெளியே தேடவேண்டிய அவசியம் நமக்கில்லை..."

கோகுல்நாத் நிமிர்ந்தார்.

"விஷ்ணு! நீ என்ன சொல்றே...?"

"ரவி இந்த நிமிடம் இங்கேதான் இருக்கான்..."

"எ...ன்...ன...?"

"வாங்க பார்க்கலாம்..."

விஷ்ணு எழுந்து— அறையின் கோடியிலிருந்த மாடி... நோக்கிப் போனான். அவருக்கு முன்னால் பார்கவி நட... தொடங்க, கோகுல்நாத் அதிர்ச்சி அப்பிக்கொண்ட முகத்தோ... அவர்களைப் பின்தொடர்ந்தார்.

வளைந்துகொண்டு போன மாடிப்படிகளில் ஏ... வராந்தாவில் நடந்து— எதிர்ப்பட்ட முதல் அறைக்கு... நுழைந்தார்கள்.

அறை மருந்து நெடியோடு ஒரு கிளீனிக் மாதிரி இருந்தது. அறையின் மையத்தில் அந்தக் கட்டில் தெரிய—

தலை முழுக்க 'பாண்டேஜ்' கட்டோடு அந்த உருவம் கட்டிலில் மல்லாந்திருந்தது. இரண்டு கால்களிலும், வலக்கையிலும் கணிசமாய் 'பாண்டேஜ்' கட்டுகள் தெரிந்தன.

கோகுல்நாத் அதிர்ச்சியாய்க் கட்டிலை நோக்கிப் போனார். 'பாண்டேஜ்' துணிக்கு நடுவே இறுக மூடியிருந்த கண்களும், நாசித் துவாரங்களும், திறந்து கிடந்த வாயும் தெரிந்தன. ஏறி இறங்கும் மார்பில் சுவாசம் இருப்பது புரிந்தது.

"விஷ்ணு...! ரவி... எப்படி... இங்கே... அதுவும்... இந்த நிலைமையில்...?" கோகுல்நாத் அதிர்ச்சியாய்க் கேட்க, பார்கவி குறுக்கிட்டார்:

"நான் சொல்றேன், சார்... இன்னிக்கு விடிகாலை ரெண்டரை மணி சுமாருக்கு ஒரு அவசர கேசை பார்த்துட்டு சென்னையிலிருந்து கும்மிடிப்பூண்டி வந்துட்டிருந்தேன்... கும்மிடிப்பூண்டிக்கு ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும்போது ரோட்டோரமா ஒருத்தன் வேகமா ஓடிட்டிருந்தது தெரிஞ்சது. எதுக்காக இப்படி ஓடுறான்னு நான் யோசிச்சிட்டிருக்கும் போதே அவன் ரோட்டை கடக்க முயற்சி பண்ணினான்.

என் காரோட முகப்பு வெளிச்சம் அவன் மேல் விழுந்து நனைச்ச விநாடி, எதிர்ப்பக்கத்திலிருந்து வேகமா வந்த





...லாரி, கண்ணிமைக்கிற நேரத்துக்குள்ளே... அவனை ...டோரமா தூக்கி வீசிட்டுப் போயிடுச்சு... லாரி நிற்கலை. ...ன் உடனே காரை நிறுத்திட்டு— ரோட்டோரத்துல இரத்த ...வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக்கிட்டிருந்த அவனைத் ...தூக்கி காரில் போட்டேன். அரசாங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டு ...போறதுக்குள்ளே செத்துடுவான் போல் தோணிச்சு.

ஆபத்துக்குப் பாபமில்லைன்னு இங்கே வீட்டுக்குக் கொண்டுவந்து... வீட்டுல இருந்த வேலைக்காரங்க உதவியோடு மாடிக்கு எடுத்து வந்தேன். அவனுக்கு லேசா நினைவு வந்தப்ப 'உன் பேர் என்ன?'ன்னு கேட்டேன். ரவின்னு சொன்னான். உடனே எனக்கு, பத்திரிகையில் செய்தி படித்த ஞாபகம் வந்தது. அதோடு, விஷ்ணு இந்த வழக்கை விசாரிக்கிற விசயம் தெரிஞ்சதால... விஷ்ணுவை நாலு மணி சுமாருக்கு போனில் தொடர்புகொண்டு விசயத்தைச் சொன்னேன்..."

விஷ்ணு இப்போது குறுக்கிட்டான்... "அங்கிள்... டாக்டர் பார்கவி போன் பண்ணி என்கிட்டப் பேசும்போது— அவங்க சொன்ன ஒரு விசயம் என் மனசுக்கு வித்தியாசமாகப்பட்டது... அவன்கிட்ட 'உன் பேர் என்ன?'ன்னு கேட்டிருக்காங்க... அதுக்கு அவன் அந்த நிலைமையிலும் தன்னோட பேரை தெளிவா 'ரவி'ன்னு சொல்லி இருக்கான்.

கொலைவெறி பிடிச்ச ஒரு மனநோயாளிக்கு இந்தத் தெளிவு சாத்தியமா...? இந்த சந்தேகம் என் மனசுக்குள்ளே உருவானதுமே... நடந்திருக்கிற கொலைகளுக்குப் பின்னாடி வேறு ஏதோ விவகாரம் இருக்கிற மாதிரி தெரிஞ்சது. ஆக, ரவி சுயநினைவுக்கு வந்து அவன் வாக்குமூலம் தருகிற வரைக்கும் விசயத்தை வெளியே விடக்கூடாதுன்னு முடிவு பண்ணினேன். அதான் உங்களை மட்டும் இங்கே வரச் சொன்னேன்..."

"உன்னோட சந்தேகம் சரிதான் விஷ்ணு. ஏன்னா... இன்னிக்குக் காலையில் பெசன்ட்நகர்ல டாக்டர் சம்பந்தம்

கொலை செய்யப்பட்டிருக்கார். பிணத்தை அங்கேயே பரிசோதனை செய்த டாக்டர் கொடுத்த அறிக்கையில்— சம்பந்தம் விடிகாலையில் செய்யப்பட்டிருக்கணும்ன்னு தெரியுது. லாரி மோதி, ரவி விபத்துக்குள்ளானது இராத்திரி ரெண்டு மணிக்கு. ஆக, அவன் டாக்டர் சம்பந்தத்தைக் கொலை செய்திருக்க முடியாது.”

“இதே மாதிரி மற்ற டாக்டர்களின் கொலைக்கும், ரவிக்கும் எந்தவித தொடர்பும் இல்லாமே இருந்திருக்கலாம்...”

“ம்...” என்று தலையசைத்த கோகுல்நாத், மருத்துவரை ஏறிட்டார். “ரவிக்கு... சுயநினைவு வந்து உங்ககிட்ட பேசும்போது தன் பெயரை தவிர வேறு எந்தத் தகவலும் சொல்லலையா?”

“இல்லை... நான் பேரைக் கேட்டதுமே ரவின்னு சொல்லிட்டு உடனே நினைவு இழந்துட்டான்...”

“மறுபடி இவனுக்கு நினைவு வருமா...?”

“இனி கஷ்டம்... ரவிக்கு இப்போ கிட்டத்தட்ட ‘கோமா’ நிலை. மூளைப் பகுதியில் உறைந்து போயிருக்கிற இரத்தத்தை அடுத்த பன்னிரண்டு மணி நேரத்துக்குள்ளே ஆபரேஷன் பண்ணி எடுக்கணும். ஆப்ரேஷன் பண்ணாத பட்சத்தில் கோமா தெளியாமலேயே உயிர் பிரிய வாய்ப்பிருக்கு. ரவியை உடனடியாக சென்னைக்கு கொண்டுபோய் மேல் சிகிச்சை பண்ணணும்...”

விஷ்ணு, கோகுல்நாத்தை ஏறிட்டான்.

“ரவியை சென்னைக்கு கொண்டு போயிடலாமா அங்கிள்?”

கோகுல்நாத் கையமர்த்தினார். “விஷ்ணு! இப்போ வழக்கோட நிலைமை மாறியிருக்கு. ரவிக்கு யாரோ எதிரிங்க இருக்காங்கன்னு தெரியுது... லாரி விபத்து ஏற்பட்டு, ரவி மயக்கமானது தெரியுமே... டாக்டர் சம்பந்தத்தைக் கொலை பண்ணியிருக்காங்க. இது நமக்குக் கிடைச்சிருக்கிற மிக



# சினிமா துளிகள்

## அரவாணி மனோரமா!



ஆயிரம் படங்களுக்கு மேல் நடித்து உலக சாதனை புரிந்தவர், மனோரமா. முதல்முறையாக இப்போது அரவாணி வேடத்தில் நடிக்கிறார்.

“வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்.” படத்தையடுத்து “நண்பன் எம்.பி.பி.எஸ்.” என்ற பெயரில் புதுப்படம் தயாராகிறது. இதில்தான் நடிகை மனோரமா, அரவாணியாக நடிக்கிறார்.

## நடிகையின் நடனப் பள்ளி!

கனவு நாயகியான இரண்டெழுத்து நடிகைக்கு இப்போது படவாய்ப்பு இல்லை. பிழைப்பை ஓட்டுவதற்காக நடனப் பள்ளி ஒன்றை தொடங்கி இருக்கிறார். ஆனால், மாலை ஆறு மணி வரைதான் நடனப் பள்ளியில் அவருக்கு வேலையாம்.

## எல்லாமே புதுசு!

“ஆரம்பப்பள்ளி” என்ற பெயரில் புதுப்படம் எடுக்கிறார்கள். இதில் அனைத்து பாத்திரங்களிலும் புதுமுகங்களுக்கே வாய்ப்பு.

நடிகர் — நடிகைகளை தேர்வு செய்ய தயாரிப்ப நிறுவனத்தினர் ஊர் ஊரா போகிறார்கள்.

முக்கியமான தகவல். ரவி உயிரோடு இருக்கிறது தெரிஞ்சா எதிரிகளால் ஆபத்து ஏற்படலாம். ரவி, ஆஸ்பத்திரியி இருக்கும் விசயம் வெளியே யாருக்கும் தெரியக்கூடாது."

"நீங்க சந்தேகிப்பதைப் பார்த்தா, ஆஸ்பத்திரியைவிட் தப்பிச்சு வெளியே போன ரவியை யாரோ கடத்திக்கொண் போய் வெச்சுட்டு— டாக்டர்களை கொலை பண்ணி, அந்த பழியை ரவி மேல் போட பார்த்திருக்காங்க... அவங்ககிட் இருந்து தப்பி ஓடிவரும்போது லாரி மோதி ரவிக்கு விபத்து ஆகியிருக்கணும்."

"அதே...!" என்றார், கோகுல்நாத்.

## 12

**அ**ழைப்பு மணிச் சத்தம் கேட்டது. நாற்காலியில் துவண்டு போய்ச் சாய்ந்திருந்த மீராவின் அப்பா எழுந்து போய்க் கதவைத் திறந்தார்.

வெளியே—

கோகுல்நாத், விஷ்ணு.

"உங்களுக்குத் தொந்தரவு தர்றதுக்காக மன்னிக்கணும்."

"வாங்க..." சக்கையாய் உலர்ந்துபோன குரலில் முனங்கி விட்டு உள்ளே நடந்தவரை இருவரும் பின்தொடர்ந்தார்கள். மீராவின் அப்பா எதிரே இருந்த நாற்காலிகளைக் காட்டினார். அவர்கள் உட்கார்ந்தபின் கேட்டார்.

"இனியும் என்கிட்ட விசாரிக்க என்ன இருக்கு?"

"ரவியோட விவகாரத்துல இப்போ ஒரு புது தகவல் கிடைச்சிருக்கு."

"அந்த கொலைகாரனைப் பத்தி என்கிட்டப் பேசாதீங்க..."



"ரவி கொலைகாரன் இல்லை..."

"என்ன சொல்றீங்க...? ரவி கொலைகாரன் இல்லையா...?"

"ஆமா... உங்க பொண்ணு கொலையானதுக்கும், மத்த டாக்டர்கள் கொலையானதுக்கும் ரவி காரணமாய் இருக்க முடியாதுன்னு நினைக்கிறோம்..."

"எதை வெச்சு அப்படி உறுதியாகச் சொல்றீங்க...?"

"காரணத்தைப் பின்னாடி சொல்றோம்... இப்போ நாங்க கேக்கிற கேள்விக்கு நல்லா யோசனை பண்ணிப் பதில் சொல்லுங்க."

"என்ன கேக்கப்போறீங்க?"

"மீரா கொலை செய்யப்பட்ட அந்த இராத்திரியில் ரவியை இந்த அடுக்குமாடி குடியிருப்பில் பார்த்ததாய் வாக்குமூலத்தில் நீங்க சொல்லி இருக்கீங்க...?"

"ஆமா..."

"அன்னிக்கு நீங்க பார்த்தது ரவியைத்தானா...?"

"ஆமா..."

"நல்லா யோசனை பண்ணி அந்தச் சம்பவத்தை மறுபடியும் மனதின் மையத்துக்குக் கொண்டுவந்து அலசிப் பார்த்துட்டு அப்புறமா பதில் சொல்லுங்க..."

மீராவின் அப்பா தன் இடக்கை ஆட்காட்டி விரலால் நெற்றியைத் தேய்த்தபடி யோசிக்க ஆரம்பிக்க— கோகுல்நாத் கேட்டார்:

"அவனை நல்ல வெளிச்சத்துல பார்த்தீங்களா...?"

"இல்லை... மசமசப்பான இருட்டுலதான் பார்த்தேன். ரவி மாதிரிதான் தெரிந்தது."

"ரவி மாதிரின்னா... தொள தொளன்னு ஆஸ்பத்திரி சீருடை கலைஞ்ச தலை, வெறிச்ச மாதிரி பார்வை...?"

"ஆமா..."

"அந்த முகத்தைச் சரியா பார்த்தீங்களா…?"

"பார்க்கலை… நான் பார்த்ததெல்லாம் ஒரு நொடிதான்."

"அதுவும் அரை இருட்டுல…"

"ஆமா…"

"அது ரவி இல்லாமே வேறு யாராவதாகக்கூட இருக்கலாம் இல்லையா?"

மீராவின் அப்பா யோசித்தார்.

"ம்… சொல்லுங்க…"

"நீங்க சொல்ற மாதிரியும் இருக்கலாம்… நான் சரியா கவனிக்கலைன்னுதான் என் மனசுக்குப்படுது…"

"இது போதும்…"

**அரசு பொது மருத்துவனை—**

மருத்துவர் கலாதரன் கண்கள் மூடி சில விநாடிகள் யோசித்து, பின் எதிரில் உட்கார்ந்திருந்த கோகுல்நாத்தையும் விஷ்ணுவையும் ஏறிட்டார்.

"நீங்க சொல்லுறது தப்பு இன்ஸ்பெக்டர்… என்னைக் கொல்ல வந்த ரவியை நான் பார்த்தேனே…?"

"நீங்க பார்த்திருப்பீங்க டாக்டர். ஆனா, அது ரவி இல்லை… இருக்கவும் முடியாது."

"எனக்குக் குழப்பமா இருக்கு…"

"இதில் குழப்பிக்க எதுவுமே இல்லை டாக்டர். நான் கேட்கிற கேள்விகளுக்கு நல்லா யோசனை பண்ணி பதிலைச் சொல்லுங்க போதும். பின்பக்கக் கதவை பிறாண்டும்போது, நீங்க நல்ல தூக்கத்துலதானே இருந்திருப்பீங்க?"

"ஆமா…"

"உங்க வீட்டு நாய்தான் கதவைப் பிறாண்டுறதா நினைச்சுட்டு தூக்கக் கலக்கத்திலேயே போய் கதவைத் திறந்திருப்பீங்க…?"



"ஆமா…"

"கதவைத் திறந்ததும் ரவியைப் பார்த்தீங்க…?"

"ஆமா…"

"நல்ல வெளிச்சத்துல பார்த்தீங்களா…?"

"இல்லை, 'ஜீரோ வாட்ஸ்' வெளிச்சம்…"

"அந்த நேரத்துல கண்ணாடி போட்டிருந்தீங்களா…?"

"இல்லை…"

கோகுல்நாத் புன்னகைத்தார். "டாக்டர்! நல்லா தூங்கிட்டிருந்த நீங்க, கதவு பிறாண்டுற சத்தம் கேட்டதும் தூக்கக் கலக்கத்துல நடந்துபோய் கதவைத் திறந்து இருக்கீங்க… கண்ணாடி போடலை. ஜீரோ வாட்ஸ் வெளிச்சம். ஆஸ்பத்திரி சீருடை மாட்டிகிட்டு ரவி மாதிரி எவனோ வரவும், ஏற்கனவே பயத்துல இருந்த உங்களுக்கு வந்தவன் ரவி மாதிரி தெரிஞ்சிருக்கான்… இப்போ யோசனை பண்ணிப் பாருங்க… நான் சொல்றது சரின்னு உங்க மனசுக்குப் படும்…"

மருத்துவர், மையமாய் தலையாட்டினார்.

"இருக்கலாம்… நான் கதவைத் திறந்ததுமே எனக்கு அவகாசம் கொடுக்காமே என்மேல பாய்ந்தான்… வந்தவன் ரவி மாதிரி இருந்தானே தவிர… அவன் ரவிதான்னு நிச்சயமாகச் சொல்ல முடியாது. அதை நான் ஏத்துக்கிறேன், மிஸ்டர் இன்ஸ்பெக்டர்… இதைச் சொல்லும்போது எனக்கு இன்னொரு சந்தேகமும் வருது…"

"என்ன…?"

"என் வீட்டு நாய் சார்லியை ஒரு நபரால் கொன்னுருக்க முடியாது… குறைந்தபட்சம் ரெண்டு பேராவது வீட்டுக்குள்ளே வந்திருக்கணும்…"

கோகுல்நாத் குறுக்கிட்டார். "என்னோட கணிப்பும்

இதுதான் டாக்டர்... ஆஸ்பத்திரிலிருந்து தப்பிச்சு வெளியே போன ரவியை யாரோ மடக்கி தங்களோட கட்டுப்பாட்டுக் குள்ளே வெச்சுகிட்டு மீராவையும் டாக்டர்களையும் கொலை பண்ணி இருக்காங்க..."

"எதுக்காக அந்தக் கொலைகள்...? என்ன நோக்கம்?" மருத்துவர் கேட்க, விஷ்ணு சொன்னார்:

"என் மனசுக்கு தோணுகிறது இதுதான்...! விவகாரம் மீராகிட்டே இருந்து கிளம்பி இருக்கணும்."

"மீராவா...?"

"ஆமா... கொலை செய்யப்பட்டவங்க அத்தனை பேரும் டாக்டர், மீராவைத் தவிர..."

"இந்தக் கருத்து கொஞ்சம் வித்தியாசமா இருக்கு..."

"டொக்... டொக்..."

வெளியே கதவு தட்டப்பட்டதில் ஓர் அவசரம் தெரிந்தது.

"வாங்க..." மருத்துவர் குரல் கொடுக்க, நர்சு பார்வதி எட்டிப் பார்த்தாள்.

"டாக்டர்... ஸ்பெஷல் வார்டில் இருக்கிறவருக்கு திடீர்ன்னு மாரடைப்பு... பக்கத்துல வேறு டாக்டர் யாருமில்லை..."

கலாதரன் எழுந்தார்.

"இப்ப வந்துடுறேன்..." விஷ்ணு, கோகுல்நாத் இருவரிடமும் சொல்லிக்கொண்டு வெளியே வந்தார்.

"அட்டாக் எப்ப வந்தது...?"

"இப்பத்தான்..."

கலாதரன் அந்த நீள வராந்தாவில் வேகவேகமாய் நடக்க, நர்சு பார்வதி அவருக்கு இணையாக வேகவேகமாய்ப் போனாள். வராந்தாவின் பாதி தூரத்தைக் கடந்ததும்



ல்லிய குரலில் கேட்டாள்:

"டாக்டர்... போலீஸ் என்ன சொல்றாங்க?"

"நடந்த கொலைகளுக்கெல்லாம் ரவி காரணமாய் இருக்க டியாதுங்கிற உண்மையைக் கண்டுபிடிச்சுட்டாங்க... நான் ாட்ட திட்டம் எல்லாமே கெட்டு குட்டிச்சுவராயிடுச்சு... ல்லாம் புஷ்பராஜ் பண்ணின தப்பு. ரவியை சரியாக அடைச்சு வக்காமே அசட்டையாக இருக்கப் போய் அவன் ப்பிச்சுட்டான்..."

"ரவி இப்ப எங்கே இருக்கான்னு ஏதாவது தகவல் தரிஞ்சதா டாக்டர்...?"

"ரவி இப்போ கோகுல்நாத், விஷ்ணு பிடியில் இருக்கான். ாரி மோதி தலையில் படுகாயத்தோடு சுயநினைவு இல்லாமே ருக்கானாம்... அவன் விபத்தில் மாட்டிக்கிட்ட விசயம் தரியாமே புஷ்பராஜ் நம்ம கொலை பட்டியலில் இருந்த ாக்டர் சம்பந்தத்தைத் தீர்த்துக்கட்டி இருக்கான்... புஷ்பராஜ் ண்ணின ரெண்டாவது மடத்தனம், இது."

"ரவி இருக்கிற இடத்தைச் சொன்னாங்களா, டாக்டர்?"

"இன்னும் சொல்லலை...! பேசிட்டிருக்கும்போதுதான் கூப்பிட்டே..."

"போலீஸ் வந்ததும் எனக்கு டென்ஷனாயிடுச்சு டாக்டர். ங்களை வெளியே வரவழைக்கத்தான் நோயாளிக்கு ாரடைப்புன்னு சொன்னேன்... வந்ததுக்கு, நோயாளியைப் ார்த்துட்டு போயிடுங்க..."

வார்டுக்குள் நுழைந்து— ஈ.சி.ஜி. எடுத்து பார்ப்பதில் ஒரு த்து நிமிடம் செலவழித்துவிட்டு— நர்சு பார்வதியோடு றுபடியும் வராந்தாவுக்கு வந்தார்.

பார்வதி வியர்த்திருந்தாள்.

"இப்ப என்ன பண்ணுறது டாக்டர்...?"

"கோகுல்நாத், விஷ்ணுகிட்ட எப்படியாவது பேசி ர இருக்கிற இடத்தை தெரிஞ்சுக்கிறேன்... அதுக்கப்புறம குற்றுயிரும் குலையிருமா இருக்கிற ரவியோட மிச் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போம்."

மறுபடியும் அறைக்குள் நுழைந்தார், மருத்துவ கலாதரன்.

கோகுல்நாத்தும் விஷ்ணுவும் காத்திருந்தார்கள்.

"சாரி... பேசிட்டிருக்கும்போது வெளியே போக வேண்டியதாயிடுச்சு..."

"என்ன ஆச்சு...?" என்ற கோகுல்நாத், கலாதரனை ஏறிட்டார்.

"[illegible]க்டர்! உண்மைகள் வெளியே வரணும்ன்னா ரவிக்கு நினைவு திரும்பணும்... தலையில் ஒரு ஆப்ரேஷன் பண்ணினாத்தான் நினைவு திரும்பும்ன்னு விஷ்ணுவுக்கு வேண்டிய டாக்டர் சொல்லி இருக்காங்க... அந்த ஆபரேஷன் இரகசியமா செய்யப்படணும்ங்கிறது எங்க எண்ணம்."

கலாதரன் புன்னகைத்தார்.

"உங்களுக்கு எந்தவகையிலும் உதவி செய்ய நான் தயாரா இருக்கேன்..."

"அந்த ஆபரேஷனை நீங்க பண்ணணும் டாக்டர்."

## 13

"அந்த ஆபரேஷனை நீங்க பண்ணணும் டாக்டர்!" கோகுல்நாத் அப்படிச் சொன்னதும், கலாதரனின் மனசுக்குள் ஆனந்த அலைகள் அடித்தன. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் முகத்தை அப்பாவித்தனமாய் வைத்துக்





கொண்டு கேட்டார்:

"ரவிக்கு ஏன் இரகசியமா ஆபரேஷன் செய்யணும்?"

"டாக்டர்! நான் ஏற்கனவே சொன்னதுபோல் ஆஸ்பத்திரியிலிருந்து தப்பிச்சு வெளியே போன ரவியை யாரோ மடக்கி போய்த் தங்களோட கட்டுப்பாட்டுக்குள் வெச்சுகிட்டு மீராவையும் டாக்டர்களையும் கொலை பண்ணி இருக்காங்க. இப்போ காணாம போயிட்ட ரவியை அவங்க மும்முரமாகத் தேடிகிட்டு இருக்கலாம்.

இந்த நிலைமையில் ரவி உயிரோடு இருக்கிற விசயம் தெரிஞ்சா, அவங்களால ஆபத்து வரலாம். எதிரிகளுக்கு விசயம் தெரியுறதுக்கு முந்தியே ரவிக்கு ஆபரேஷனை பண்ணி— அவனை சுயநினைவுக்குக் கொண்டுவந்து பேசவெச்சுட்டா உண்மைகள் வெளியே வந்துடும்."

"இப்ப ரவி எங்கே?"

"கும்மிடிப்பூண்டியில் இருக்கிற ஒரு டாக்டர் வீட்டில்."

அந்த மருத்துவர் யார் என்பதைத் தெரிந்துகொள்ள கலாதரன் ஆர்வப்பட்டாலும், அதை வெளிக்காட்டி கொள்ளாமல் மெல்லிய குரலில் கேட்டார்:

"ஆபரேஷனை எங்கே வெச்சுக்கலாம்?"

"கும்மிடிப்பூண்டியிலேயே வெச்சுக்கலாம். அப்புறம் இன்னொரு விசயம் டாக்டர். ரவிக்கு ஆபரேஷன் நடக்க போகிற விசயம் வெளியே யாருக்கும் தெரியக்கூடாது. எங்க போலீஸ் துறைக்கே நாங்க தெரிவிக்கலை.

அதே மாதிரி நீங்களும் வேறு யாருக்கும் தெரியப்படுத்த வேண்டாம். ரவிக்கு ஆபரேஷன் முடிஞ்சு, சுயநினைவு திரும்பி அவனோட வாக்குமூலம் கைக்குக் கிடைச்ச பின்னாடிதான் விசயத்தை வெளியே சொல்லப்போறோம்."

"ரவி உயிரோடு இருக்கிற விசயம் இப்போ யார் யாருக்கு



தெரியும் மிஸ்டர் கோகுல்நாத்?"

"மொத்தம் நாலு பேருக்கு! நீங்க, நான், விஷ்ணு, டாக்டர் பார்கவி."

"நல்லது."

கோகுல்நாத் எழுந்து, அவரின் கையைப் பற்றி குலுக்க— விஷ்ணுவும் எழுந்தான்.

கும்மிடிப்பூண்டி.

மருத்துவர் கலாதரனின் கார், பார்கவி வீட்டுக்குள் நுழைந்தபோது இராத்திரி மணி 10.05. வேனைவிட்டு இறங்கிய கலாதரனை பார்கவியும், கோகுல்நாத்தும் எதிர் கொண்டார்கள். பரஸ்பர அறிமுகம் முடிந்ததும் பார்கவி கேட்டார்.

"டாக்டர்! ஆபரேஷனுக்கு வேண்டிய எல்லாத்தையும் வேனிலேயே கொண்டு வந்துட்டீங்களா?"

"ஆமா! வாங்க, மொதல்ல ரவியோட நிலையைப் பார்த்துட்டு அதுக்கப்புறமா ஆபரேஷனுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்."

உள்ளே போனார்கள்.

மாடிப் படிகள் ஏறும்போது கலாதரன் கேட்டார்.

"மிஸ்டர் விஷ்ணு எங்கே?"

"ரவி மீது மோதிய லாரியை பற்றிய தகவல் அந்த போலீஸ் நிலையத்துக்குக் கிடைத்திருக்கிறது. அது சம்பந்தமா விசாரிக்கப் போயிருக்கார். பத்து நிமிடத்துக்குள்ளே வந்துடுவார்."

மாடிப் படிகள் முடிந்ததும் எதிர்ப்பட்ட வராந்தாவில் நடந்து அறைக்குள் நுழைந்தார்கள்.

அறைக்குள் ஜீரோ வாட்ஸ் வெளிச்சம் பரவி இருக்க—

கட்டிலை நோக்கிப் போனார், கலாதரன்.

"ரவிக்கு உடம்பு முழுக்க அடிபட்டிருக்கும் போலிருக்கே?
உடம்புல ஒரு இடம் பாக்கி இல்லாம 'பாண்டேஜ்'
போட்டிருக்கு."

பார்கவி குறுக்கிட்டுச் சொன்னார்.

"எல்லா இடத்திலேயும் இரத்தக் காயம் இருந்தது. முகத்தைப்
பாருங்க. உதடு, நாசித்துவாரங்கள், கண்ணிமை கள் மட்டுமே
தெரியுற மாதிரி 'பாண்டேஜ்' போடவேண்டிய நிலைமை. ரவி,
இப்போதைக்கு ஒரு ஜடம்."

கோகுல்நாத்திடம் கலாதரன் நிமிர்ந்தார்.

"இவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கிற ரவியை
ஆபரேஷன் பண்ணிக் காப்பாத்தணுமா மிஸ்டர்
கோகுல்நாத்?"

"டாக்டர்! நீங்க என்ன சொல்றீங்க?"

"ரவியை சாகடிச்சுடலாம்ன்னு சொல்றேன். அது
மட்டுமில்லை. அவருக்குத் துணையா உங்களையும் சாகச்
சொல்றேன்" ஒரு கோணல் சிரிப்பு சிரித்துக்கொண்டே—
தன் கோட்டு பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து— அந்தக்
கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டார், கலாதரன்.

மருத்துவர் பார்கவியும், கோகுல்நாத்தும் திடுக்கிட்டார்கள்.

கலாதரன், கையிலிருந்த துப்பாக்கியை அசைத்தார்.

"ரெண்டு பேரும் அப்படியே நடந்துபோய் சுவருக்குப்
பக்கத்துல மண்டி போட்டு உட்காருங்க."

"டா...டாக்டர்..."

"மறுபேச்சு பேசாதீங்க. சொன்னபடி கேட்கணும். எனக்கு
எரிச்சல் வர்ற மாதிரி நடந்துகிட்டா, அந்த நிமிடமே
சுட்டுடுவேன்."

கோகுல்நாத்தும், பார்கவியும் பின்னோக்கி நகர்ந்துபோய்



சுவருக்குப் பக்கத்தில் மண்டியிட்டு உட்கார்ந்தார்கள்.

அறைக் கதவருகே நிழலாடியது.

கலாதரன் குரல் கொடுத்தார்.

"வா, புஷ்பராஜ்..."

அந்த கட்டுமஸ்தான இளைஞன் உள்ளே வந்தான். கையில்
கயிற்றுச் சுருள். கலாதரன், கோகுல்நாத்தைப் பார்த்துப்
புன்னகைத்தார்.

"இந்த புஷ்பராஜ் யாருன்னு தெரியுதா, கோகுல்நாத்.
இவன் அரசாங்க ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கிறான்.
எனக்கு வேண்டியவன். விசுவாசி. எனக்கு ஒருத்தரைப்
பிடிக்கலைன்னா, அவனுக்கும் அவர்களைப் பிடிக்காது.

ரவி பண்ணினதா வெளியுலகம் நினைச்சுட்டிருக்கிற
அத்தனை கொலைகளையும் பண்ணினது இந்த புஷ்பராஜ்
தான். ரவி, கட்டிடத்து மேலே ஏறிப்போனதா பொய்
சொன்னதும், கீழ்ப்பாக்கம் மருத்துவகல்லூரி ஆய்வுகூடத்தில்
பூனையோட கழுத்தை நெரிச்சதும், என் வீட்டு நாயைத்
துடிக்கத் துடிக்கக் கொன்னதும் இந்த புஷ்பராஜ்தான்...

இப்போ உங்களுக்கு முடிவு கட்டப் போறதும் இவன்தான்.
என்னோட காரில்தான் இவனும் வந்தான். நாம முன் கதவு
வழியா வீட்டுக்குள்ளே நுழைஞ்சோம். இவனுக்கு வழி பின்
வாசல்." சிரித்த கலாதரன், அங்கிருந்த தொலைபேசியை
கோகுல்நாத்துக்குப் பக்கத்தில் நகர்த்தி வைத்தார்.

"நீங்க, போலீஸ் நிலையத்துக்கு போன் பண்ணி விஷ்ணுவை
உடனே வரச் சொல்லுங்க... அவனுக்காகவும் இந்தத்
துப்பாக்கியில் ஒரு தோட்டா காத்திட்டிருக்கு."

"........."

"என்ன கோகுல்நாத்! வாயடைச்சுப் போயிட்டீங்க! நான்
நினைச்சிருந்தா ஆபரேஷன் செய்யுற மாதிரி பாவ்லா பண்ணி,
ரவியை மாத்திரம் தீர்த்துக் கட்டியிருக்க முடியும். ஆனா...

அதுக்கப்புறம் நீங்களும், விஷ்ணுவும் சும்மா இருக்க மாட்டீங்க. நடந்த கொலைகளுக்கு ரவி காரணமில்லைன்னு தெரிஞ்சுகிட்டு ஒவ்வொரு விசயத்தையும் யோசிச்சு யோசிச்சுப் பார்ப்பீங்க. ஏதாவது ஒரு இடத்துல என்னைப் பத்தின சந்தேகம் தட்டும்.

விசாரணை என்கிற பேரில் துருவித் துருவி கேள்விகளைக் கேட்பீங்க. போலீஸ் துறையில் கெட்டிக்காரங்கன்னு பேர் எடுத்த நீங்க ரொம்ப சீக்கிரத்திலேயே என் கையில் விலங்கை மாட்டுவீங்க. அந்த அவதியெல்லாம் தேவைதானா, கோகுல்நாத்? உங்களையும், விஷ்ணுவையும், டாக்டர் பார்கவியையும் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு பலியா கொடுத்துட்டு, இங்கே ஜடமா படுத்துட்டிருக்கிற ரவியை மறுபடியும் என்னோட கண்காணிப்பில் வெச்சுகிட்டு... என்னோட பட்டியலில் இருக்கிற, எனக்குப் பிடிக்காத இன்னும் நாலு டாக்டர்களை தீர்த்துக்கட்டப் போறேன்.

அந்த கைங்கரியம் முடிந்ததும்... ரவியைக் கண்காணாத ஏதாவது ஒரு இடத்துக்குக் கொண்டுபோய் பெட்ரோல் ஊத்திக் கொளுத்திடுவேன். அதுக்கப்புறம், இல்லாத ரவியைத் தேடிகிட்டு போலீஸ் படை அலையாய் அலையட்டுமே!"

கோகுல்நாத் ஒன்றும் பேசாமல் கலாதரனையே முறைக்க, அவர் தொலைபேசி ரிசீவரை எடுத்து கையில் திணித்தார்.

"ம்... விஷ்ணுவுக்கு போன் பண்ணி அவனைக் கூப்பிடுங்க."

"விஷ்ணு, போலீஸ் நிலையத்தில் இல்லை..."

"பின்னே... எங்கே...?"

"இதோ... இங்கே..."

பின்பக்கம் குரல் கேட்க— மருத்துவர் கலாதரன் அதிர்ச்சியாய்த் திரும்பிப் பார்த்தார்.

'பாண்டேஜ்' கட்டுகளோடு— கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்திருந்தான், விஷ்ணு.



...ண் இமைக்கிற நேரம்கூட இல்லை. கலாதரன் திரும்பிப் ...ார்த்த விநாடியை பயன்படுத்திக்கொண்டு— பக்கத்தில் ...ருந்த கோகுல்நாத், கலாதரனின் கையிலுள்ள துப்பாக்கியை ...டிப் பறித்தார்.

விஷ்ணு தன் உடம்பில் சுற்றியிருந்த 'பாண்டேஜ்' கட்டுகளை ...ருவிக்கொண்டே கீழே இறங்கினான். அவனுடைய ...க்கையில் இப்போது துப்பாக்கி வெளிப்பட்டது.

"சாரி டாக்டர்... தடங்கலுக்கு வருந்துகிறேன். இன்னிக்கு ...த்தியானம் மூணு மணிக்கு மேல்தான் உங்க மேல எனக்கும் ...ாகுல்நாத் அங்கிளுக்கும் சந்தேகம் வந்தது. எப்படி சந்தேகம் ...ந்ததுன்னு கேக்கிறீங்களா...? உங்க வீட்டு நாய் சார்லி செத்துப் ...ானதில் ஒரு சந்தேகம் வந்தது. நாய்க்கு விஷம் கொடுத்து ...ால்லப்பட்டிருக்கலாமோ என்கிற எண்ணத்தில் நாயைப் ...தைச்ச இடத்தை மறுபடியும் தோண்டி அதோட உறுப்புகளை ...டுத்து சோதனை பண்ணிப் பார்த்ததில் அதில் 'நிகோடின்' ...ஷம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

நாய்க்குக் கொடுத்த சாப்பாட்டில் தான் விஷம் கலக்கப் ...டிருந்தது என்கிற உண்மையும் தெரிந்தது. இந்த விபரங்கள் ...டங்கிய அறிக்கை என் கைக்குக் கிடைச்சதும் உங்களுக்கே ...தரியாமே உங்க வீட்டு வேலைக்காரன் ஒருத்தனை ...டேஷனுக்கு கூட்டிப்போய் விசாரிச்சோம். செத்துப்போன ...ய் சார்லிக்கு நீங்கதான் சாப்பாடு வைப்பீங்கன்னும், ...லைக்காரங்களை கிட்டே அண்ட விடாதுன்னும் ...ான்னான்.

சார்லி மாதிரியான டாபர்மேன் இன நாய்கள் தொடர்ந்து ...த்தரே சாப்பாடு வெச்சாத்தான் அது தின்னும் என்கிற ...ண்மையை ஒரு நாய் பயிற்சியாளர் மூலமா தெரிஞ்சு ...டோம்... சார்லிக்கு விஷம் கலந்த உணவை நீங்க ஏன் ...க்கணும்...? ரவி விவகாரத்துல உங்ககிட்டதான் ஏதோ ... இருக்குன்னு தெரிஞ்சிக்கிட்டோம்... இராத்திரி பத்து

**சாதாரண உப்புக்குத் தடை!**

தமிழ்நாட்டில் சாதாரண உப்பு விற்க மேலும் 5 ஆண்டு தடை விதிக்கப்பட்டுள்ளது. அயோடின் கலந்த உப்பு, இரும்புச்சத்து கொண்டு பலப்படுத்தப்பட்ட உப்பை மட்டும் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு உள்ளது.

மணிக்கு ரவிக்கு நீங்க ஆபரேஷன் பண்ண வரும்போது... உங்களால் அவனுக்கு ஏதாவது ஆபத்து வரும்ன்னு நினைச்சோம்.

அந்த மாதிரியான சந்தர்ப்பத்தில் உங்களைக் கையும் களவுமாகப் பிடிக்கத்தான்... உடம்பு முழுக்க பாண்டேஜை சுத்திகிட்டு அந்தக் கட்டிலில் நான் படுத்துகிட்டேன். முகத்தில் தொண்ணூறு சதம் மறைந்திருந்ததால... உங்களால என்னைக் கண்டுபிடிக்க முடியலை... ரவி பக்கத்து அறையில் பத்திரமா இருக்கான்...”

மருத்துவர் கலாதரனும், ஆஸ்பத்திரி ஊழியர் புஷ்பராஜும் பொறிக்குள் மாட்டிக்கொண்ட எலிகளைப்போல் திணற— கோகுல்நாத்தும் விஷ்ணுவும் கைகளில் துப்பாக்கிகளோடு அவர்களை நெருங்கினார்கள். நெற்றிப் பொட்டுகளில் துப்பாக்கி வாயை வைத்தார்கள்.

“இப்ப சொல்லுங்க... ஆஸ்பத்திரியிலிருந்து ரவியைக் கடத்திப் போய் வெச்சுகிட்டு, எதுக்காக இத்தனை கொலைகள்...?”

கொஞ்சம் யோசித்துவிட்டு, கம்மிப்போன குரலில் கலாதரன் பேச ஆரம்பித்தார். “கடந்த ரெண்டு வருடமாகவே என் மனசுக்குள்ளே தொழில் போட்டி. என்கூட படிச்ச பல டாக்டர்கள் நல்லா பேரும் புகழுமா இருக்கிறதைப் பார்க்கப் பார்க்க மனசுக்குள்ளே ஒரு பொறாமைத் தீ. இந்தத் தீயை என்னால அணைக்க முடியலை... நாளுக்கு நாள்



இந்தத் தீயோட உக்கிரம் அதிகமாச்சு...

தொழிலில் எனக்கு நிம்மதியில்லை... இராத்திரி நேரங்களில் ஒரு மணி நேரம்கூட என்னால தூங்க முடியலை... பேரும் புகழோடு இருக்கிற இந்த டாக்டர்கள், ‘சுனாமி’. மாதிரி ஏதாவது ஒரு விபத்துல செத்துப் போயிடக்கூடாதான்னு ஆரம்பத்துல நினைச்சேன்... அதுக்கப்புறம் கொஞ்ச நாள் கழிச்சு... அவர்களை நாமே கொலை பண்ணிட்டா என்னன்னு திட்டமிட்டேன்.

இந்த நேரத்துலதான்... என்னிடம் ரவி வந்து சேர்ந்தான். அவனுக்கு நான் சிகிச்சை செய்யும்போது... ‘டாக்டர்களை வெறுக்கிறேன். டாக்டர்களை கொலை பண்ணுவேன்’னு அவன் கத்தினான். இர்த்தத்தால சுவரில் எழுதி வெச்சான்.”

“உடனே... ரவியை ஒரு போர்வையாகப் பயன்படுத்தி, உங்களுக்குப் பிடிக்காத—தொழிலுக்குப் போட்டியா இருக்கிற டாக்டர்களை தீர்த்துக்கட்ட முடிவு பண்ணினீங்க...?”

“ஆ... ஆமா...”

“அப்படீன்னா... ரவி, ஆஸ்பத்திரியிலிருந்து தானாக ஓடலை. நீங்கதான் புஷ்பராஜ் மூலமா கடத்திட்டுப் போய் உங்க பாதுகாப்பில் வெச்சுகிட்டீங்க...?”

“ஆமா...”

“எங்கே...?”

“கும்மிடிப்பூண்டிக்கு போகிற வழியில் இருக்கிற என்னோட விருந்தினர் விடுதியில்.”

“ரவி தப்பிபோகும் வரை அங்குதான் இருந்தானா?”

“ஆமா...”

“ரவிக்கு உண்மையிலேயே மூளை பாதிப்பு இருந்ததா?”

“இல்லை... ரெண்டுநாள் கொஞ்சம் ‘டென்ஷனா’ இருந்தான். அதை மூளை பாதிப்புன்னு கதை கட்டிவிட்டது

நான்தான்..."

"சிகிச்சை கொடுக்க வந்த டாக்டர் மனோவை கழுத்தைப் பிடிச்சு நெரிச்சு கொலை பண்ணினது ரவிதானே?"

"இல்லை...ரவி கழுத்தைப் பிடிச்சதும், மனோ பயத்திலேயே மயக்கமாய் கீழே சாய்ந்துவிட்டார்... அவரை ஐ.சி. யூனிட்டுக்கு கொண்டுபோய் சிகிச்சை தர்ற மாதிரி பாவ்லா பண்ணி, ஒரு ஊசியைப் போட்டு அவரோட உயிருக்கு நான்தான் முற்றுப்புள்ளி வெச்சேன்."

"அடுத்து, டாக்டர் கோபிநாதன் செத்துப்போனதுகூட உங்க கைங்கரியம்தானா...?"

"ஆமா...! ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்கியதில் ஒரு பெரிய தொகை எனக்கு லஞ்சமா கிடைச்சது... புஷ்பராஜுக்கும் இந்த லஞ்சத்தில் பங்கு உண்டு. இதை அந்த டாக்டர் தெரிஞ்சுகிட்டு தனக்கு பங்கு தரலைன்னா... மேலிடத்துக்கு கடிதம் போடப்போறேன்னு சொல்லிட்டிருந்தார். ரவியோட போர்வையில் அவரது கதையையும் முடிச்சோம்."

"மீராவை எதுக்காக கொலை பண்ணினீங்க!"

"ரவிக்கு மீரா மேல வெறுப்பு இருந்தது. டாக்டர்கள் மட்டுமே கொலையானால் போலீசுக்கு சந்தேகம் வரலாம்ன்னு நினைச்சு... ரவி மேல போலீசோட சந்தேகத்தை அதிகரிக்கிறதுக்காக மீராவைக் கொலை பண்ணினோம்..."

"கொலைகள் பண்ணினது பூராவும் புஷ்பராஜ்தானா?"

"ஆமா..."

"நீங்க டைரக்ஷன் பொறுப்பை மட்டும் பார்த்துகிட்டீங்க போலிருக்கு...! வாங்க டாக்டர், ஸ்டேஷனுக்கு போய் இனி மத்த விவகாரங்களையெல்லாம் பேசிக்கலாம்..."

கலாதரனும், புஷ்பராஜும் நெட்டித் தள்ளப்பட்டார்கள்.



**மா**தம் ஒன்று கரைந்து போயிருக்க— காயங்கள் ஆறி ஆஸ்பத்திரியில் கட்டிலின் மேல் உட்கார்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்த ரவி 'பூட்ஸ்' சத்தங்கள் கேட்டு நிமிர்ந்தான்.

கோகுல்நாத், விஷ்ணு.

விஷ்ணுவின் கையில் ஒரு உறை.

ரவி புன்னகைத்தான்.

"வாங்க சார்..."

விஷ்ணு உறையை நீட்டினான். "ரவி! உனக்கு வேலை தந்த அதே கம்பெனியிலிருந்து மறுபடியும் வேலைக்கு உத்தரவு வந்திருக்கு. இந்த வாரத்துக்குள்ளே நீ வேலையில் சேரலாம்."

ரவி எழுந்து அந்த உறையை வாங்கி— பக்கத்து மேசை மேல் இருந்த பெட்டியில் வைக்கப்பட்டிருந்த தன் அம்மா, மீராவின் படத்துக்குக் கீழே வைத்தான்.

"அம்மா! என் அன்பு மீரா... எனக்கு மறுபடியும் வேலை கிடைச்சிருக்கு. ரெண்டு பேரும் என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க..."

கோகுல்நாத்தும், விஷ்ணுவும் இதயங்கள் கனக்க ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்.

இரண்டு பேரின் கண்களிலும் நீர் சுர்ரென்று சுரந்து பளபளத்தது.

**(முடிந்தது)**

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.